வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.05.2023 சனிக்கிழமை | இதழ் : 169 | பக்கங்கள் : 16



# தமிழரசு தலைமையை ஏற்க தயார்

## சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

“அனைவரும் ஏகமனதாக என்னைத் தெரிவு செய்தால் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கத் தயார்”, என்று அந்தக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமை தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேறகண்டவாறு கூறினார்.

மேலும், “நான் பதவிக்காகக் கட்சிக்குள் போகவில்லை. முரண்பாடு இல்லாத நிலை ஏற்பட்டு அனைவரும் ஏகமனதாகத் தெரிவு செய்வார்களாக இருந்தால் - போட்டியில்லாது அனைவரும் ஒத்துழைத்து - இணக்கத்துடன் தெரிவு செய்தால் தலைமையை நான் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளேன்.

ஒருமனதாக - முரண்பாடு இல்

15

# இலத்திரனியல் திரைகள்; குழந்தைகளுக்கு ஆபத்து

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மே 27

“இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எந்தவிதமான இலத்திரனியல் திரைகளுடனும் நேரத்தை செலவிடக் கூடாது என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது”, என சிறுவர் மற்றும் இளம்பருவ உளவியல் நிபுணர் மருத்துவர் தர்சினி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இலத்திரனியல் திரைகளில் நேரத்தை செலவிடுவது அவர்களின் அறிவு சார் திறன்களின் வளர்ச்சியில் எதிர்மறையான

15

# நாடு முன்னேற வேண்டுமெனில் நிரந்தர அரசியல் தீர்வு அவசியம்!

## சஜித்திடம் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, மே 27

“நாடு முன்னேற வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும்.” - இவ்வாறு தன்னை சந்தித்த எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்துள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் மாலை இரா. சம்பந்தனை அவரின் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயம் தொடர்பாக இரா. சம்பந்தன் எம். பி. கூறுகையில்,

“நாம் இருவரும் சமகால அரசியல்

15

# 146 நாட்களில் 239 பேர் கொலை; 23 பேர் துப்பாக்கி சூட்டுக்கு பலி!

கொழும்பு, மே 27

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரை 23 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பொலிஸாரின் புள்ளிவிவர தகவல் மூலம் தெரிய வந்துள்ளது. அத்துடன், இந்த ஆண்டு நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 6 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குற்றப் பிரிவின் முன்னாள் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி, “2019ஆம் ஆண்டு 273 கொலைகள் பதிவாகின. இது 2023இல் 523ஆக அதிகரித்திருந்தது. 2023இல் 146 நாட் களில் இது வரை 239 கொலைகள் பதிவாகியுள்ளன.

15

# உண்மையை மறைக்கும் ராகுல தேரர் துறவு உடையை களைய வேண்டும்!

## மறவன்புலவு சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம், மே 27

தையிட்டியில் யாரோ ஒருவரின் காணியை அடாத்தாக பிடித்து விகாரையை கட்டினார்கள். அதை இடித்து, நிலத்தை மீள கொடுக்க வேண்டும் என்று கூறுபவரே தேரர். தம்மபதத்தை படித்து - அதன் வழி நடப்பவர்.

இந்நிலையில், விகாரையை தமிழ் பௌத்தரிடம் கையளிப்போம் என்று கூறுகின்ற ராகுல தேரர் துறவு உடையை களைய வேண்டும் என்று கூறியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

நேற்றைய தினம் அவர் விடுத்த குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், “பொகவந்த லாவை ராகுல தேரர் சொல்கிறார் - புத்தரின் கருத்துரை தெரியாதவர் சொல்கிறார் - இரட்டை மணிமாலையே தம்மபதத்தின் தொடக்க அத்தியாயம். புத்தர்

15

# மாணவர்களை தாக்கிய ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், மே 27

மூன்று மாணவர்களை கடுமையாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

தெல்லிப்பழையின் பிரபல பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆசிரியர் ஒருவர் மாணவர்களை கடுமையாக தாக் கினார் என்று கூறப்படுகின்றது.

15

# வடக்கு, கிழக்கு வாக்குகளுக்காக அரசு பின்னோக்கி பயணிக்கிறது

## மேர்வின் சில்வா சொல்கிறார்



கொழும்பு, மே 27

வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக முதுகெலும்பு இல்லாத அரசாங்கம் பின்னோக்கி பயணிக்கிறது என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இன்மையே பல பிரச்னைகளுக்குக் காரணமாகும். வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அரசாங்கம் பின்னோக்கிப் பயணிக்கின்றது.

திருகோணமலையில் இடம் பெறவிருந்த உப

15

# இந்திய - இலங்கை சுதந்திர ஒப்பந்தம் கறுப்பு பட்டியலுக்குள் சேர்க்கப்படலாம்

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை



கொழும்பு, மே 27

முறையற்ற மீள் ஏற்றுமதி நடவடிக்கையால் இலங்கை - இந்தியா இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கறுப்பு பட்டியலுக்குள் உள்ளடக்கப்படும் நிலை காணப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர்,

இலங்கை - இந்திய சுதந்திர ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கையில் இருந்து இந்திய சந்தைகளுக்கு சுமார் 4,000 பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனூடாக தேசிய உற்பத்தியாளர்கள் பயனடைகிறார்கள்.

இந்தோனேசியாவில் இருந்து உலர்ந்த பாக்கு இறக்குமதி செய்யப்பட்டு, அவை இலங்கை ஊடாக இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த மீள் ஏற்றுமதியின்போது பெறுமதி சேர் வரி ஊடான வருமானம் முறையாகக் கிடைக்கப் பெறுகிறதா என்பது சந்தேகத்துக்கு உள்ளாகியுள்ளது.

மீள் ஏற்றுமதி நடவடிக்கையின் போது இடம்பெறும்

15

# பெரிய நீலக்கல் வெறும் கதையே!

கொழும்பு, மே 27

இரத்தினபுரியில் தோண்டி எடுக்கப்பட்ட பின்னர், உலகின் மிகப் பெரிய நீல இரத்திக்கல் எனக் குறிப்பிடப்பட்ட இரத்தினக்கல்லின் உண்மையான பெறுமதி வெறும் 10 ஆயிரம் அமெரிக்க டொலரே என்று கோப் கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

தேசிய இரத்தினம் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிகாரிகள், இந்தக் கல் தொல்லியல்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதித் தேர்தலுடன் உள்ளூராட்சி தேர்தலையும் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒன்றாக வைக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான சிலர் அவருக்கு ஆலோசனை தெரிவித்திருக்கின்றனர் என்று நேற்று முன்தினம் இந்த பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு ஒரு நண்பர் தொலைபேசியில் தொடர்புகொண்டு நீண்ட நேரம் பேசினார்.

அவரும், மாகாண சபைகள் இயங்க வேண்டும் அப்படியென்றால்தான் இன்றுள்ள பல்வேறு பிரச்னைகளுக்கும் ஓரளவாவது தீர்வைக் காணமுடியும் என்ற நம்பிக்கை உள்ளவர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது தமிழ் மக்களுக்கு என்ன தான் நம்பிக்கை இருந்தாலும் (அதாவது மற்றைய வேட்பாளர் களுடன் ஒப்பிடுகையில்) அவர் அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடனேயே போட்டியிடவிருக்கிறார். இது அவருக்கு தமிழ் வாக்குகளைப் பெறுவதில் ஒரு பலவீனம்தான். ஆனாலும், மகிந்தவுடன் சேர்ந்திருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குகின்ற விடயத்தில் அவர்களின் விருப்பம் இல்லாவிட்டாலும் ரணில் தான் நினைத்ததைச் செய்யக்கூடியவர் என்ற நம்பிக்கையை அவர் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் அவரை தமிழ் மக்கள் கொஞ்ச மேனும் ஏற்றுக்கொள்வார்கள். அவருக்கு நெருக்கமான தமிழ் வட்டாரங்கள் இதனை அவருக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்பதே அந்த நண்பரின் விருப்பமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

உள்ளூராட்சி தேர்தலை நடக்காமல் செய்வதற்காக ரணில் என்ன என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தார்.

அப்போது, உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றால் தமது கட்சி மூன்றாவது அல்லது நான்காவது இடத்தையே பெற்றிருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். அப்படியொரு நிலைமை ஏற்பட்டிருந்தால், அதன் பின்னர் நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் அதன் தாக்கம் பிரதிபலித்திருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று அல்லது நான்கு வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் அவர்களில் யார் சிறந்தவர் என்று வாக்காளர்கள் எடைபோட்டுப் பார்த்தால் அதில் ரணில் சற்று நிறைகூடியவராக இருப்பார். அதனால் தளம் பல் நிலையிலுள்ள வாக்காளர்கள் அவரையே ஆதரிப்பார்கள்.

ஆனால், அதற்கு முன்னதாக உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றால், ஐக்கிய தேசியக் கட்சி நான்காவது இடத்தை அடையும் போது அவரால் ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றிபெறமுடியாது என்ற எண்ணம் அந்த வாக்காளர்களுக்கு வந்துவிடும். அது, ரணிலே சிறந்தவர் என்ற எண்ணம் இருந்தாலும் வெற்றி பெறமுடியா தவருக்கு ஏன் தமது வாக்குகளைப் போட்டு அவற்றை வீணடிப்பான் என்ற கேள்வி ஏற்பட்டுவிடும். அது ரணிலுக்கு பாதகமான முடிவைக் கொண்டு வந்துவிடும்.

இதனாலேயே உள்ளூராட்சி தேர்தலை என்ன விலை கொடுத்தேனும் தடுக்கவேண்டும் என்று அவர் விரும்பியிருக்கலாம்.

ஆனால், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஜனாதிபதி தேர்தலோடு நடத்தினால், அது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

உள்ளூராட்சி தேர்தல் என்பது பெரும்பாலும் அந்தந்த பிரதேச சபைகளின் விருப்புகள், தேவை கள், வாக்காளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு என்பவையே அதிகம் கவனிக்கப்படும். அதேபோலவே மாகாண சபைகளும் அந்தந்த மாகாணங்களின் நலன் சார்ந்து சிந்தித்தே மக்கள் வாக்களிப்பர். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அப்படியிருக்காது. அதில் தனிநபர்களின் ஆளுமையே அதிகம் கவனத்தைப் பெறும். அப்படியிருக்கும்போது மூன்று தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவது ரணிலைப் பொறுத்தவரை எந்தப் பாதிப்பையும் அவருக்கு ஏற் படுத்தாது.

ரணிலைப் பொறுத்தவரை தெற்கில் மேல்மட்ட மற்றும் நடுத்தர மக்களின் வாக்குகளே அவருக்கு அனுகூலமானவை. ராஜபக்ஷக்களுடன் இணைந்திருப் பதால் கிராமப்புற மற்றும் சிங்கள கடும்கோட்பாளர்களின் வாக்கு களை அவர் இதனூடாக இலக்கு வைக்கலாம். ராஜபக்ஷக்களுடன் நிற்பதால் மாத்திரம் அவருக்கு கடும்கோட்பாளர்களின் வாக்கு கள் கிடைக்குமா என்பது தெரிய வில்லை. ராஜபக்ஷக்களுக்கு வாக்களிக்கப் பழக்கப்பட்டவர் கள் அவர்கள் சொல்கின்ற வேட் பாளருக்கு வாக்களிப்பார்களா என்பது தெரியவில்லை.

அது தேர்தல் நெருங்குகின்ற போதே ஓரளவேனும் கணிப்பிடக் கூடியதாக இருக்கும். ஆனால், ரணில் சிறுபான்மையினரின் வாக்குகளை அப்படியே சேதாரம் இல்லாமல் பெறவேண்டும் என்றால் அவர்களை ஏதோவொரு வகையில் திருப்திப்படுத்தியே ஆகவேண்டும்.

அதற்கு அவருக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒன்றுசேர நடத்துவது அனுகூலமாக இருக்கும். அதனையே தொடர்ந்து வலியுறுத்திவரும் பக்கத்து நாட்டுக்கும் அது விருப்பமானதாக இருக்கும். அதுகூட அவருக்கு நல்லதுதான்.

இந்த விடயங்களை அலசிய அந்த நண்பர், இதனை நமது தமிழ் எம். பிக்கள் மூலமாக அவருக்கு கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த ஊர்க்குருவியால் செய்யக்கூடியது இது ஒன்று தானே. அதுதான், அவர் சொன்னவற்றை இங்கே எழுதுவதுதான்.

- ஊர்க்குருவி

## யாழ். - மன்னார் பேருந்து சேவை நேர மாற்றத்தால் பலர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் - மன்னார் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலைக்கு சொந்தமான பேருந்து சேவையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் அரச ஊழியர்கள் உள்பட தினமும் சேவையை பயன்படுத்தும் பயணிகள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அதிகாலை 5. 45 மணிக்கு மன்னார் புறப்படும் பேருந்து மீளவும் முற்பகல் 10.15 மணிக்கு மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சேவையை ஆரம்பிக்கும்.

மீளவும் பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் புறப்படும் பேருந்து அங்கிருந்து மீளவும் மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு சேவையை ஆரம்பிக்கும்.

இந்த சேவையில் ஈடுபடும் பேருந்தை யாழ்ப்பாணம் சாலை நிர்வாகம் மாற்றுவதனால் தாம் பாதிக்கப்படுவதாக ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நிரந்தர சேவையிலிருந்த நல்ல நிலையிலிருந்த பேருந்து கொழும்பு சேவை உள்பட சிறப்பு சேவைகளுக்கு மாற்றப்படுவதனால் குறுந்தூர சேவைக்கு பயன்படுத்தப்படும் பேருந்துகளே மேற்படி யாழ்ப்பாணம் - மன்னார் சேவைக்கு பயன்படுத்தப்படுகிறது.

இரு மார்க்கமாக தினமும் 5 மணி நேரத்துக்கு மேல் வார நாட்களில் பயணிக்கும் அரச மற்றும் தனியார் ஊழியர்கள், சரியான தரம் இல்லாத பேருந்தில் பயணித்து உபாதைக்கு உள்ளாவதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

நெடுந்தூர சேவையில் ஈடுபட உரிய தரநிலையில் இல்லாத பேருந்துகளை வழங்கும் யாழ்ப்பாணம் சாலை நிர்வாகம் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று பல்வேறு முறை முறையிட்ட போதும் முன்னேற்றம் இல்லை என கூறப்படுகிறது.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுத்து தமது சௌகரியமான பயணத்தை உறுதி செய்யுமாறு கோரி மன்னார் மாவட்ட செயலாளர் ஊடாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு மனு ஒன்றை வழங்கும் ஏற்பாடும் முன்னெடுக்கப் படுகிறது.

அந்த மனுவில் குறிப்பிடுவதற்காக மாதாந்தம் இ. போ.சபைக்கு அரச மற்றும் தனியார் ஊழியர்களினால் பருவச்சீட்டு மூலம் செலவிடும் பல இலட்சம் ரூபாய் பணம் தொடர்பான விவரமும் திரட்டப்படுகிறது. அத்துடன், நெடுந்தூர சேவையில் ஈடுபடுத்துவதற்கான தரநிலை இல்லாத பேருந்துகளை யாழ்ப்பாணம் சாலை முகாமையாளருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் யாழ்பபாணம் மாவட்ட செயலாளரிடமும் முறைப்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

## பொன். மாணிக்கவாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி!

வவுனியா, மே 27

மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா நகரமண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா ஊடக அமையத்தலைவர் பரமேஸ்வரன் கார்த்தீபன் நிகழ்த்துவார்.

அதனைத்தொடர்ந்து நினைவுரைகள் வரிசையில் “ஊடகவியலில் மாணிக்க வாசகம்” எனும் தலைப்பில் சிரேஸ்ட ஊடகவியலாளர் ரத்துகமகே சிறப்புரை நிகழ்த்துவார்.

“கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணிக்கம்” எனும் தலைப்பில் வவுனியா வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், “மக்கள் சேவையில் மாணிக்கவாசகம்” எனும் தலைப்பில் தமிழ் விருட்சம் சமூகஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், “வாசகர்பார்வையும் அனுபவ பகிர்வும்” எனும் தலைப்பில் சட்டத்தரணி ஐயம்பிள்ளை யசோதரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வவுனியா ஊடக அமையம் அழைத்து நிற்கின்றது.

(ஐ-07)

## தான்தோன்றீஸ்வரர் கும்பாபிஷேகம் கர்மாரம்ப கிரியைகள் நேற்று ஆரம்பம்!

முல்லைத்தீவு, மே 27

வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் என்று அழைக்கப்படும் பூலோகநாயகி உடனமர் வேகாவனேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், நேற்றைய தினம் ஆலயத்தில் கர்மாரம்ப கிரியைகள் ஆரம்பமாகின. ஆலய பிரதம குரு சிவசிறீ இராஜாராம் உள்ளிட்ட சிவாச்சாரியார்களால் கிரியைகள் நடத்தப்பட்டன.

இன்றும், நாளையும் கிரியைகள் நடைபெற்று திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை எண்ணெய்காப்பு நடைபெற்று எதிர்வரும் வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ)

## டெங்கு நோய் பரவலை தடுப்பதற்கு மாகாண ஆளுநர்களுக்கு உத்தரவு

### பிரதமர் தினேஷ் விடுத்தார்

கொழும்பு, மே 27

டெங்கு நோய் பரவலை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக மெய்நிகர் வழியில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், மாகாண ஆளுநர்கள், மாகாண செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்கள் ஊடாக நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.05.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தலைமை போட்டி எப்போது முடிவுறும்?

இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு - தான் தயாரென்று சீ. வீ. கே. சிவஞானம் அறிவித்திருக்கின்றார். தமிழரசு கட்சிக்குள் ஒரு தலைமைத்துவ போட்டி நிலவுவதாகவும் - குறிப்பாக எம். ஏ. சுமந்திரனும் சிவஞானம் சிறிதரனும் தலைமைத்துவத்தை இலக்கு வைத்து செயல்படுகின்றனர் என்றும் அண்மையில், மாவை சோ. சேனாதிராசா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சீ. வீ. கே. சிவஞானத்தின் அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. இதன் மூலம் சொல்லப்படும் செய்தி தெளிவானது. அதாவது, தற்போது கட்சியின் தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராசா அதற்கு தகுதியற்றவர். அவர் மாற்றப்பட வேண்டும் என்பதாகும். ஏனெனில், மாவையின் தலைமையில் நம்பிக்கை இருப்பின் இவ்வாறான கருத்துகள் வெளிவந்திருக்காது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மாவை சேனாதிராசா தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து மாவையின் முக்கியத்துவம் கட்சிக்குள் தொடர்ந்தும் சரிந்துகொண்டே சென்றது. தவிர, மாவை ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதுகூட சம்பந்தன் மாவை சேனாதிராசாவுக்கு முக்கியத்துவம் கொடுத்தமைக்கு சான்றில்லை. உதாரணமாக 2013இல் வடக்கு மாகாண சபைக்கான முதன்மை வேடப்பாளர் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற நாட்களில் மாவையை நியமிக்க வேண்டும் என்பதே பெரும்பான்மையினரின் கோரிக்கையாக இருந்தது.

சம்பந்தனின் தொகுதியான திருகோணமலையிலிருந்துகூட, அவ்வாறான கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. ஆனால், சம்பந்தனோ படித்த - அறிவுள்ள - சர்வதேச சமூகம் கருத்தில்கொள்ளத்தக்க ஒருவரையே தான் வேட்பாளராக கொண்டுவர முயற்சிக்கின்றேன் - இதனை குழப்ப வேண்டாமென்னும் தொனியில் பதிலளித்திருந்தார். இதன் மூலம் இவ்வாறான தகுதிகள் எவையும் மாவை சேனாதிராசாவுக்கு இல்லையென்பதையே சம்பந்தன் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருந்தார்.

மாவை சேனாதிராசாவும் சம்பந்தன் கூறியதற்கு அமைவாக தன்னிடம் அவ்வாறான தகுதிகள் எவையுமில்லை என்பதை ஒப்புக்கொண்டு அமைதியடைந்தார். அப்போதே, மாவை சேனாதிராசாவின் தலைமைத்துவ தகுதி கேள்விக்கு உள்ளாகிவிட்டது. பின்னர், தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மிகுதியும் இல்லாமல் போய்விட்டது. இந்த பின்புலத்தில்தான், தமிழரசு கட்சியின் புதிய தலைவர் யாரென்னும் கேள்வியும் அதற்கான பதில்களும் அவ்வப்போது ஊடகங்களில் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன.

தமிழரசு கட்சி பழம்பெரும் கட்சி. தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் தகுதி தங்களுக்கே உண்டு என்னும் அடிப்படையிலேயே அதன் அரசியல்வாதிகள் பொதுவெளிகளில் பேசிவருகின்றனர். ஆனால், கட்சியின் மூத்த உறுப்பினர்களோ கட்சியின் தலைமைத்துவ பிரச்னையைக்கூட, நிவர்த்தி செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். கட்சியின் தலைமைத்துவ நெருக்கடிகளையே சரிசெய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் எவ்வாறு மக்களை வழிநடத்தப் போகின்றனர்?

# ‘மரணத்தில் பூத்த மலையகம்’ யாழ்ப்பாணத்தில் இன்று

*யாழ்ப்பாணம், மே 27*

மலையக தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாவதை ஒட்டி “மரணத்தில் பூத்த மலையகம்” நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என். இன்பம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் இயக்குநர் அன்ரனி ஜேசுதாசன், மலையக மக்களின் மாண்பை பாதுகாக்கும் அமைப்பின் அருட்பணி சக்திவேல், அரசியல் ஆய்வாளர் அ. யோதிலிங்கம், அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், யாழ். மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் முரளீதரன், யாழ். பல்கலைகழக ஓய்வுநிலை பேராசி ரியர் கலாநிதி சூசை சிலுவை தாசன், யாழ். பல்கலைகழக ஊழியர் சங்க உப தலைவர் யசோதரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், புதியஅதிபர் கள் சங்கத்தின் செயலாளர் சிவசுப்பிரமணியம் நேதாஜி, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார, மலையக தோட்டத் தொழிலாளிகளான திருமதி சாலட், வி. சதாசிவம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மலையக தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாடகம் மற்றும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

(ஐ)

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா; 12 இலட்சம் ரூபாய் செலவானது!

*யாழ்ப்பாணம், மே 27*

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவை நடத்துவதற்காக கத்தோலிக்க மத அலுவல்கள் திணைக்களத்தால் 12 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாக யாழ். மாவட்ட செயலகம் குறிப்பிட்டுள்ளது.

கச்சதீவு திருவிழாவுக்கான செலவு விவரங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்துக்கு இரு மாதங்கள் கழித்து மாவட்ட (ஐ)செயலகம் பதில் அளித்துள்ளது.

அதன் முழுவிவரம் வருமாறு,

**யாழ். மாவட்ட செயலகம்**

கச்சதீவு திருவிழாவுக்கு கத்தோலிக்க மத அலுவல்கள் திணைக்களத்தால் 12 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்த நிதியில் நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு 10 இலட்சம் ரூபாயும், யாழ். மாவட்ட செயலகத்துக்கு 2 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டன.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு வழங்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் உற்சவத்துக்கு தேவையான பொருட்கள், குடிதண்ணீர் தாங்கி மற்றும் தளபாடங்களை கொண்டு செல்வதற்கும், அவற்றை திருவிழா முடிவடைந்ததும் மீள உரிய இடங்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பதற்குமான எரிபொருள் செலவு, கச்சதீவு திருவிழா தொடர்பான முன்னேற்பாட்டு கலந்துரையாடல்களுக்கான ஒழுங்கமைப்பு செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

மேலும், நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாயில் உணவுப் பொருட்கள், சுகாதாரப் பொருட்கள், எரிபொருள், மின்பிறப்பாக்கி, சுத்திகரிப்பு பணியாளர் சம்பளம், படகு கட்டணம், நீர்ப்பம்பிச் செலவுகள் உள்ளடங்குகின்றன.


2023.02.25 அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, கச்சதீவு திருவிழாவில் அதிகளவு இந்திய பக்தர்களும் கலந்துகொள்வதால் இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் செலவினங்களில் சிலவற்றை மீளளிப்பு செய்வதாக இந்திய துணைத் தூதரக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட செலவு விவரங்களின் நிதிக் கோரிக்கை விவரம் யாழ். இந்திய துணைத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை இடம்பெற்ற கச்சதீவு திருவிழா தொடர்பில் உரிய ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் திருவிழா முடிவுற்ற மறுநாளே ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒதுக்கப்பட்ட நிதியின் யாழ். செலவு விபரங்கள் மாவட்ட செயலகத்தால் விரிவாக தரப்படாத நிலையில், நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் செலவு விவரங்களை நெடுந்தீவு பிரதேச செயலகம் ஊடாக பெற்றுக்கொள்ளுமாறு தகவல் கோரிக்கையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 27 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 13**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : அஷ்டமி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். வியாபாரத்தில் கமிஷன் புரோக்கரேஜ் வகைகளால் லாபம் உண்டு. சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து லாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மேலதிகாரி ஆதரிப்பார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர் எண்ணிக்கை குறையும். கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மோதல்கள் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். மரியாதை கூடும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியால் வெற்றி பெறும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மகரம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் வருவார்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

# அமைச்சர் பாலாஜிக்கு சொந்தமான 40 இடங்களில் வருமான சோதனை!

சென்னை, மே 27

தமிழக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வீடு, அவரது சகோதரர் வீடு மற்றும் அவர்களுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட 40இற்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை, கரூர், கோவை, பெங்களூரு, ஹைதராபாத், கேரள மாநிலம் பாலக்காடு உள்ளிட்ட ஊர்களில் 40இற்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாநகராட்சி மேயர் கவிதா உள்ளிட்ட தி. மு. வினர் அங்கே திரண்டதால் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர் செந்தில் கார்த்திகேயனின் வீடுகளிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

ஏற்கெனவே, போக்குவரத்து துறையில் வேலை வாங்கித்தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாக அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக முறைப்பாடு உள்ளது. இதில், அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க உச்சநீதி மன்றம் அண்மையில் உத்தர விட்டது.

இதேபோல், அண்மையில் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை ஆளுநர் ஆர். என். ரவியை சந்தித்து அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்க பரிந்துரைக்குமாறு வலியுறுத்தி மனு கொடுத்தார். இந்நிலையிலேயே, அவருக்கு சொந்தமான பல இடங்களில் நேற்று வருமான வரித்துறையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ஐ)

# அ. தி. மு. க. ஆட்சியில் தமிழ்நாடு முதலீட்டுக்கு உகந்ததாக இல்லை!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

சென்னை, மே 27

அ. தி. மு. க. ஆட்சியில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழகம் இல்லை என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில்,

உலக முதலீட்டாளர் மாநாட்டில் பிற நாட்டின் தொழிலதிபர்களை பங்கேற்க செய்யவும் புதிய முதலீடுகளைக் கொண்டு வருவதற்காகவும் முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான குழுவினர் அரசு முறை பயணம் மேற்கொண்டதை கொச்சைப் படுத்தும் வகையில் அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி விமர்சனம் செய்திருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

கடந்த அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் அகில இந்திய அளவில் நாட்டுக்கு வந்த மொத்த மூதலீடுகளில் தமிழகத்துக்கு வந்தது வெறும் 0.79 சத வீதம் தான். அ. தி. மு. க. ஆட்சியில் முதலீட்டுக்கு உகந்த மாநிலம் தமிழகம் இல்லை என்ற நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்ட பல நிறுவனங்கள் வேறு மாநிலங்களுக்கு சென்றுவிட்டதை எவரும் மறுக்க முடியாது. இதற்கு காரணம் அ. தி. மு. க. ஆட்சியில் நிலவிய ஊழலும், நிர்வாக சீர்கேடும் தான்.

ஆனால், முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து கடந்த 2 ஆண்டுகளில், 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி, ரூ.2.95 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதற்கு காரணம் தமிழகத்தில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலை மிக மிக பிரகாசமாக இருப்பதுதான் - என்றார்.

(ஐ)

# செங்கோலில் நந்தி; மதச் சார்பானது!

## விடுதலை சிறுத்தைகள் கட்சி

சென்னை, மே 27

“செங்கோல் என்பது மதச் சார்பற்றது. ஆனால், பாராளுமன்ற திறப்பு நிகழ்ச்சியில் வழங்கவுள்ள செங்கோலில் நந்தி சிலை உள்ளது. இது மத சின்னமாக உள்ளதால் அதை எதிர்க்கிறோம்”, என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.



மதுரையில் அவர் கூறுகையில், பாராளுமன்ற புதிய கட்டடத் திறப்பு விழாவில் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி புறக்கணிக்கப்பட்டமை ஜனநாயக மாண்புகளுக்கு எதிரானது. திறப்பு விழா நாளில் கறுப்புக்கொடி ஏற்றவுள்ளோம்.

‘ஆந்திரா, சத்தீஸ்கர் தலைமை செயலகத்தை முதல்வர் திறந்தனர், பாராளுமன்ற கட்டடத்தை பிரதமர் திறப்பதில் தவறில்லை’ என மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கூறுகிறார். விழாவுக்கு ஜனாதிபதி, துணை ஜனாதிபதி இருவரும் முதலில் அழைக்கப்பட்டனரா என அவர் பதில் அளிப்பாரா? செங்கோல் என்பது மதச்சார்பற்றது. ஆனால், இந்நிகழ்ச்சியில் வழங்கவுள்ள செங்கோலில் நந்தி சிலை உள்ளது. இது மத சின்னமாக உள்ளதால் அதை எதிர்க்கிறோம் - என்றார்.

(ஐ)

# 75 வீத மதுபான விடுதிகளுக்கு தமிழகத்தில் உரிமம் இல்லை!

## சசிகலா குற்றச்சாட்டு

நாகபட்டினம், மே 27

தமிழகத்தில் 75 சதவீத மதுபான விடுதிகள் உரிமம் இல்லாமல் செயல்படுகின்றன என்று வி. கே. சசிகலா குற்றம்சாட்டியுள்ளார்.

வேளாங்கண்ணியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

என்னைப் பொறுத்தவரை ஓ. பன்னீர்செல்வம் மட்டுமல்ல, யார் வந்தாலும் சந்திப்பேன். அ. தி. மு. கவை பொறுத்தவரை தொண்டர்களின் விருப்பம்தான் வெற்றிபெறும். தற்போது பிரிந்து கிடப்பவர்களை ஒருங்கிணைப்பதே எனது வேலை. அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் மட்டுமே தமிழகத்தைக் காப்பாற்ற முடியும். அதை நான் நிகழ்த்திக் காட்டுவேன்.

திமுக ஆட்சியில் பிரதேச உறுப்பினர்கள் முதல் உயர்நிலை பொறுப்புகளில் உள்ளவர்கள் வரை பொலிஸாருக்கு நெருக்கடி கொடுக்கின்றனர். அவ்வாறு இருக்கும்போது பொலிஸார் எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும். இதன் காரணமாகவே கள்ளச் சாராய உயிரிழப்புகள் நேரிடுகின்றன.

தமிழகத்தில் 25 சதவீத மதுபான விடுதிகளுக்கு மட்டுமே அனுமதி உள்ளது. எஞ்சிய 75 சதவீதவீதமானவற்றுக்கு உரிமம் இல்லாமல் நடத்தப்படுகின்றன. இது, சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை - என்றார்.

(ஐ)

# ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளை பாதுகாக்கிறார் அமைச்சர் பந்துல

## நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27

**காஸ் சிலிண்டர் மோசடி, வெள்ளைபூண்டு மோசடி உட்பட பல ஊழல்கள் குறித்த விவரங்களை அம்பலப்படுத்திய நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் இயக்குநர் துசான் குணவர்த்தன மேலும் பல மோசடிகளை அம்பலப்படுத்தத் தயார் எனக் குறிப்பிட்டார்.**



பல மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர்களையும் வெளியித் டதயார் எனவும் அவர் கூறினார்.

சதொச நிறுவனத்தினால் வெள்ளை இலச்சினை இடப்பட்டு சந்தைக்கு விடப்பட்ட பழுதடைந்த ரின் மீன் குறித்து அவர் விவரங்களை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரின் மீன், வெள்ளை பூண்டு மோசடி, காஸ் சிலிண்டர் மோசடி குறித்து தகவல்கள் அம்பலமாகியுள்ளபோதிலும் இந்த மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் இன்னமும் அதே பதவிகளில் உள்ளனர். பந்துல குணவர்த்தன தனது நலன்களுக்காக ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மோசடிகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டில் இடம்பெறும் விடயங்களை நாங்கள் அலட்சியம் செய்ய முடியாது. இந்த காடையர்கள் தப்பிச்செல்ல அனுமதிக்க முடியாது. நான் பார்த்துக் கொண்டிரு க்கின்றேன். என்னிடம் பல ஆவணங்கள் உள்ளன. ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துவதற்கான ஆவணங்கள் உள்ளன.

முக்கிய விவரங்களை நான் பகிர்ந்துகொண்டுள்ள போதிலும் எதிர்க்கட்சியினர் மௌனம் காக்கின்றனர். அவர்கள் எதனையும் செய்யவில்லை.

எதிர்க்கட்சித் தலைவருடன் நான் தகவல்களை பகிர்ந்து கொண்டேன். ஆனால் இந்த விடயங்கள் குறித்து அவர் அக்கறை காட்டவில்லை-என்றார். (அ)

# இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும்!

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

கொழும்பு, மே 27

எதிர்காலத்தில் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கி கையில்- 70 வீதமாக இருந்த பணவீக்கம் இப்போது 30 வீதத்தை எட்டியுள்ளது. நான்காவது காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்கத்தை எட்டும்.

மேலும் மூலதனப் பரிவர்த்தனைகளுக்கான கட்டுப்பாடுகளை முறையாக தளர்த்துவோம். இவை இரண்டும் வணிக நடவடிக்கைகளை அதிகரிக்க உதவும் -என்றார். (அ)

# கிளிநொச்சியில் கணிசமானளவு காணிகளை விடுவிக்க தீர்மானம்

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப் பட்டிருந்த கணிசமான காணிகளையும், நீர்ப்பாசணம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தமையினால் காடுகளாக மாறியிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் மக்கள் குடியிருப்புக்களும் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தினாலும் வனஜீவராசிகள் திணைக்களத்தினாலும் பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக, துறைசார் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடனும் ஆவண ரீதியான ஆதாரங்களை முன்வைத்து தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்ததுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கு கைகொடுக்க கூடிய விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகள் முடக்கப்பட்டிருக்கின்றது என்ற ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தி வந்தார்.

இந்நிலையில், வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி மாவட்ட துறைசார் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, 85 ஆம் ஆண்டிற்கு முன்னர் விவசாய நிலங்களாகவும் மக்கள் குடியிருப்புக்களாகவும் இருந்தமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை கொண்ட காணிகளையும் கணிசமானளவு குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) பிரதேச செயலாளர்கள், காணித் திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்ட நீர்ப்பாசண பொறியியலாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதிகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# சட்டத்தரணிகளின் அறையில் மோதல்!

## புதிய சட்டத்தரணிக்கு காயம்

கொழும்பு, மே 27

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் அறையில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இருவர் தாக்கியத்தில் காயமடைந்த புதிய சட்டத்தரணி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாற்காலி தொடர்பாக ஏற்பட்ட தகராறு முற்றியதில் இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

நேற்று முன் தினம் காலை சட்டத்தரணிகள் அறையில் இரண்டு தரப்பினரும் கடுமையாக சண்டையிட்டு கொண்டதாக கூறப்படுகின்றது.

இருவரும் சம்பவம் குறித்து வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் ஒருவருக்கு ஒருவர் எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

வழக்கு தொடுநர்களைச் சந்திக்கும் உத்தியோகபூர்வமான சட்டத்தரணிகளின் அறையில் நாற்காலியில் அமர்ந்திருந்த புதிய சட்டத்தரணி, சிரேஷ்ட சட்டத்தரணிகளைப் பார்த்து "என்ன அண்ணா சிக்கலா? என்ன செய்யவேண்டும்?" என கேட்டுள்ளார்.

நாற்காலியில் இருந்து எழுந்திருக்குமாறு சிரேஷ்ட சட்டத்தரணி கூறியுள்ளார்.

இதனையடுத்து ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் சிரேஷ்ட சட்டத்தரணி, புதிய சட்டத்தரணியை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மன்னார் தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணியுடன் மூடப்படவேண்டும்

## அரச அதிபர் தலைமையில் தீர்மானம்

மன்னார், மே 27

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கைகள் மாலை 6 மணியுடன் நிறைவடைந்து கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் இயக்குனர்களுடன் அவசர கலந்துரையாடல் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்டான்லி டிமெல் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்ட தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுடன் அவசர கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை முற்பகல் 11 மணிக்கு பின்னர் ஆரம்பிக்கவேண்டும்.கிழமையின் ஏழு நாட்களிலும் மாலை 6 மணியுடன் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படவேண்டும்.பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அவசரமாக பதிவு செய்யப்படவேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாவிட்டால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் மாணவர்களின் ஒழுக்கம், ஆன்மீகம் போன்றவற்றில் தனியார் கல்வி நிறுவனங்களும் கவனம் செலுத்த வேண்டும்.

உரிய இருக்கை வசதி, சுத்தமான குடிதண்ணீர், சுகாதாரம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தவேண்டும்-என்றார்.

இந்தக் கூட்டத்தில் சர்வ மதத் தலைவர்கள், மன்னார் பிரதேச செயலாளர் ,உதவி மாவட்ட செயலாளர்,தனியார் கல்வி நிலையங்களின் பிரதிநிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் பிரதி அதிபர் காயம்

கொழும்பு, மே 27

அம்பலாங்கொடை ரண்டோம்பே பகுதியில் சற்று முன்னர் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அம்பலாங்கொடை தர்மசோக வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ஒருவர் காயமடைந்துள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் பலப்பிட்டிய மிகெட்டுவத்தை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர்.

இவர் கொஸ்கொட சுஜீ என்ற பாதாள உலகத் தலைவரின் உறவினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதி அதிபர் தர்மசோக பாடசாலைக்கு வரும் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் இருவரால் சுடப்பட்டதில் காயமடைந்த நபர், தான் பயணித்த மோட்டார் சைக்கிளிலேயே அம்பலாங்கொடை பொலிஸூக்கு வந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை எனவும், அம்பலாங்கொடையில் பன்னிரெண்டு மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்ற இரண்டாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இதுவெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுகெதர, அடடோல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை கோடீஸ்வர வர்த்தகர் ஹலம்பகே பேமசிறியின் கொலைச் சம்பவத்தில் தற்போது பிணையில் உள்ள பிரதான சந்தேக நபரை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# விமான நிலையத்தில் கடும் கட்டுப்பாடுகள்

## அரசியல்வாதிகளிடமும் சோதனை

கொழும்பு, மே 27

**கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரமுகர்களின் பகுதிகள் ஊடாக வெளிவரும் அனைத்து பிரமுகர்கள் மற்றும் அவர்களின் பொதிகளை கடுமையான சோதனைக்கு உட்படுத்த விமான நிலைய சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

அதற்கமைய, பிரமுகர்களின் பிரிவு வழியாக விமான நிலையத்திலிருந்து புறப்படும் மற்றும் வரும் அனைத்து அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் பிற முக்கியஸ்தர்கள் இனி விமான நிலையச் சுங்க அதிகாரிகளால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இந்த சோதனைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், கடந்த 24ஆம் திகதி முக்கிய பிரமுகர் பிரிவு வழியாக வந்த உயரதிகாரி ஒருவர் சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்த மின் உபகரணங்களை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 8 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் கைத்தொலைபேசிகளை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டதையடுத்து, இந்த பிரமுகர்களின் பகுதி வழியாக வரும் பிரமுகர்களைச் சோதனையிட சுங்கத்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இந்த உயரடுக்கு முனையத்தின் ஊடாக நீண்ட காலமாக பிரமுகர்கள் பெருமளவிலான தடை செய்யப்பட்ட பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வழி மூலம் தங்கம், இரத்தினங்கள், பணம் மற்றும் போதைப்பொருட்கள் கூட நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இனிமேல் இந்த பகுதிகளில் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பிரமுகர்கள் உரிய முறையில் சோதனை செய்ய சுங்கத் தலைமையகத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாக விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# ஏனைய நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கவில்லை

## சினோபெக் நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மே 27

இலங்கையில், எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானது என சீனாவின் சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பில் சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக அண்மையில் அரசாங்கம் அறிவித்தது.

இதனையடுத்து, சினோபெக் நிறுவனம் எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக தகவல்கள் வெளியாகின.

இந்தநிலையில், இதனை மறுத்துள்ள சினோபெக் நிறுவனம், தமது வணிகத்திற்காக மூன்றாம் தரப்பினரை தொடர்பு கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தமது எரிவாயு நிலையங்களுக்கான சேவை உரிமைகளை வேறு எந்த தரப்பினருக்கும் மாற்ற விரும்பவில்லை என்றும், தனது வர்த்தக நாமத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

# ரணில், மகிந்த, மைத்திரி தங்களின் சொத்தை வெளிப்படுத்தவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, மே 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் தங்களது சொத்து மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்தி நாட்டுக்கு முன்னுதாரணமாகச் செயற்படுமாறு, பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன விசேட கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

ஜனாதிபதிகள் இவ்வாறு தங்களது சொத்து விவரங்களை வெளியிடும் பட்சத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் அவர்களது சொத்து விவரங்களை வெளிப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் கூறினார்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றும்போதே எரான் விக்ரமரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான திருத்த சட்ட மூலத்தை முன்வைக்கிறேன். ஒருநாட்டை சட்டத்தால் மாத்திரம் மாற்ற முடியாது. அதற்கு முன்னுதாரணம் அவசியம்.

இதன்படி, தற்போது சபையில் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளனர். எனவே, தற்போதைய ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் தங்களது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்தி முன்னுதாரணத்தை வழங்கவேண்டும்.

அவ்வாறு செய்யும் பட்சத்தில், அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் அது முன்னுதாரணமாக அமையும். இவ்வாறு செய்தாலே நாடு மாற்றமடையும். ஊழலை ஒழிக்க முடியாது. ஆனால், குறைக்க முடியும். முறைமை மாற்றத்தையே நாட்டு மக்கள் கோரினர் -என்றார். (அ)

# வியாட்நாம் பிரதி பிரதமருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு!

கொழும்பு, மே 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது ஜப்பான் விஜயத்தின்போது, வியாட்நாமின் பிரதி பிரதமர் ட்ரான் லூ க்வென்க்கை சந்தித்துள்ளார்.

இதன்போது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கலாசார உறவுகளை மேம்படுத்துவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று ஜப்பானின் டிஜிற்றல் அமைச்சர் டாரோ கொனோவையும் சந்தித்துள்ளார்.

இலங்கையின் அரச அலுவலகங்களை டிஜிற்றல் மயப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ)

# இலங்கை போக்குவரத்து சபையில் 800 சாரதி, நடத்துநர் வெற்றிடங்கள்

கொழும்பு, மே 27

இலங்கை போக்குவரத்து சபையில் 800 சாரதி மற்றும் நடத்துநர் வெற்றிடங்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் கூடிய ஆற்றல் மற்றும் போக்குவரத்து துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் அதிகாரிகள் அழைக்கப்பட்டபோதே இது தெரியவந்தது.

இலங்கை போக்குவரத்துச் சபையில் தற்போது பணிபுரியும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 26,561 ஆகும்.

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எனச் சபையின் அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்துள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கைகள் கட்டப்பட்ட நிலையில் வயோதிபர் சடலமாக மீட்பு!

கொழும்பு, மே 28

கந்தானை - வெலிகம்பிட்டிய பகுதியில் வசித்து வந்த நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

84 வயதுடைய ஜா-எல பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் முகம் மற்றும் கழுத்துப் பகுதி துணியொன்றினால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் புதல்வி வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# லொறியின் கதவு கழன்று விழுந்ததில் சைக்கிளில் சென்ற சிறுவன் பலி!

கொழும்பு, மே 27

தனது சகோதரனுடன் சைக்கிளில் பயணித்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் மீது பாண் ஏற்றிச் சென்ற சிறிய லொறியின் கதவு கழன்று வீழ்ந்ததில் உயிரிழந்தான் என வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரலகஹலந்த, வாதுவவை பிரதேசத்தைச் சேர்ந்த குணரத்னகசன கவிந்த மெண்டிஸ் என்ற 13 வயதுச் சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்பவராவார்.

வாதுவையிலிருந்து ஹபரலகஹலந்த நோக்கி தனது இளைய சகோதரனுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பாண் லொறி ஒன்றின் பக்க வாட்டு இரும்புக் கதவு கழன்று சிறுவனின் மார்பில் பட்டபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

லொறிச் சாரதி கைது செய்யப்பட்டு பாணந்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# தொழிலாளர் கொடுப்பனவு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 27

கொக்கோ, ஏலக்காய் மற்றும் மிளகு என்பவற்றை பயிரிடும், உற்பத்தி செய்யும் பணியாளர்களுக்கு நாளாந்தம் செலுத்த வேண்டிய விசேட கொடுப்பனவு விவரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பணி புரியும் ஒருவருக்கு நாளாந்தம் 1,794 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# 20 தேங்காய் திருடியவருக்கு ஒரு வருட கடூழியச் சிறை!

கொழும்பு, மே. 27

கெஹெலல்ல பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து 20 தேங்காய்களை திருடிய இரண்டு குற்றச்சாட்டுக்களில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பிரதிவாதி ஒருவருக்கு மினுவாங்கொடை நீதவான் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு முந்தைய குற்றங்கள் எதுவும் இல்லை என்பது கைரேகை அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதால், 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

திவுலபிட்டிய கெஹல் எல்ல பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தையான சுமித் ரஞ்சித் ஜயலத் என்பவருக்கே ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களை பிரதிநிதித்துவம் செய்ய நானே பொருத்தமான வேட்பாளர்!

**கூறுகின்றார் ஜனக ரத்நாயக்க**

கொழும்பு, மே 27

**அனைத்து பொது வேட்பாளர்களும் தோல்வியடைந்துள்ளதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வேட்பாளராக போட்டியிடுவேன் எனப் பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.**

இலங்கையில் பல அரசியல் கட்சிகள் உள்ளன. ஆனால் இவை அனைத்தும் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய தவறிவிட்டன எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நானே பொருத்தமானவன்.



நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து பகிரங்கமாக அறிவித்ததும் பல கட்சிகள் எனக்கு ஆதரவளிக்க முன்வரலாம்.

நாட்டில் தற்போது பொருத்தமான பொதுவேட்பாளர் என எவரும் இல்லை. அனைவரும் தோல்வியடைந்துவிட்டனர். ஆகவே நானே மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கான மிகவும் பொருத்தமான வேட்பாளராக காணப்படுவேன்-என்றார்.

எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவீர்கள் என்ற கேள்விக்கு, இது குறித்து தான் இன்னமும் தீர்மானிக்கவில்லை. நான் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அறிவித்ததும் பல கட்சிகள் என்னை நாடிவரக்கூடும்-என்றார். (அ)

# மீள் ஏற்றுமதி பொருட்களுக்கு 35 சதவீத வரி கட்டாயமானது!

கொழும்பு, மே 27

துறைமுகத்தில் 35 சதவீதம் பெறுமதி சேர் வரி அறவிடாமல் எந்த பொருட்களும் மீள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாது. எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ துறைமுகத்தின் ஊடாக மீள் ஏற்றுமதியின்போது முறையான பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதில்லை என குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளிக்கையில் நிதி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகத்தின் ஊடாக மீள் ஏற்றுமதி செய்யப்படும் சகல தேசிய உற்பத்திகளுக்கும் 35 சதவீத பெறுமதி சேர் வரி அறவிடப்படும்.

இந்த வரிக் கொள்கை முறையாக செயற்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய தகவல்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

மீள் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதி கட்டமைப்பில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது-என்றார்.

# பிரபல சட்டத்தரணிக்கு தொலைபேசி மிரட்டல்!

கொழும்பு, மே 27

அமைச்சரின் நடவடிக்கைளில் தலையிடவேண்டாம் என பிரபல மனித உரிமை சட்டத்தரணியொருவருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை சட்டத்தரணி பிரியலால் சிறிசேனவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட நபர் ஒருவர் அமைச்சரின் நடவடிக்கைகளில் தலையிடவேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

சட்டத்தரணி பிரியலால், அந்த நபர் யார்? அவர் குறிப்பிட்ட அமைச்சர் யார்? என்பதை அறிவதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை.

வெளிநாட்டு தொலைபேசி இலக்கத்திலிருந்தே சட்டத்தரணி சிறிசேனவுக்கு குறிப்பிட்ட தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

இது குறித்து சிறிசேன குருநாகல் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதிகம் நடனமாடவேண்டாம். அமைச்சருக்கு எதிரான உங்கள் செயற்பாடுகளை விலக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் வீதியில் நடமாடவேண்டும் என்பதை மறக்கவேண்டாம் என தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட நபர் சட்டத்தரணிக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

16 வருடங்களாக சட்டத்தரணியாக பணி புரிகின்ற பிரியலால் சிறிசேன மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார்.

2018 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்த இவர், பொலிஸாருக்கு எதிராக நீதிமன்றில் பல மனுக்களை தாக்கல் செய்துள்ளார்

2016 இல் பொலிஸாரால் கணவர் கொலை செய்யப்பட்ட பெண் ஒருவர் சார்பில் சிறிசேன நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளிலும் அவர் கலந்துகொண்டுள்ளார். (அ)

# கடன்களை மறுசீரமைக்காமல் முன்னேற்றமடைய முடியாது!

**கூறுகிறார் பந்துல குணவர்தன**



கொழும்பு, மே 27

தேசிய மற்றும் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்காமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடை முடியாது. நாட்டுக்காகவே பிரபல்யமடையாத தீர்மானங்களை அரசாங்கம் எடுத்துள்ளது.

இது அரசியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தாலம். வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியல் கட்சிகள் பாரம்பரிய கொள்கைகளில் இருந்து விடுபடாமல் செயற்பட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் ஏதாவதொரு வழிமுறையில் பொறுப்புக் கூற வேண்டும்.அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதால் தற்போது பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்து அதன் பொறுப்பு ஒரு அரசாங்கத்தின் மீது மாத்திரம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசமுறை கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத பின்னணியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்துவிட்டது என அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு துறை அபிவிருத்தி பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சிப்பதால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை ஒருபோதும் தொடர முடியாது.

நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமாயின் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்கவேண்டும். கடன்களை இந்த வழிமுறையில் தான் மறுசீரமைக்கவேண்டும் என எம்மால் குறிப்பிட முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே கடன்கள் மறுசீரமைக்கப்படவேண்டும்.

தேசிய மற்றும் அரசமுறை கடன்களை மறுசீரமைக்காமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என்பதே உண்மை. பொருளாதார மீட்சிக்கான சிறந்த கொள்கை இல்லாமல் மக்கள் ஏமாற்றி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றலாம். ஆனால் அரசாங்கத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நாட்டுக்காகவே அரசாங்கம் பிரபல்யமடையாத தீர்மானங்களை எடுத்துள்ளது. இது அரசியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம். வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது. மின்னுற்பத்தி கட்டமைப்பின் கொள்கை தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. செலவுக்கு அமைய வருமானம் ஈட்டிக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# வைத்தியசாலையில் இருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்

கொழும்பு, மே 27

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறைக்கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த கைதி சுகயீனம் காரணமாக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

வைத்தியசாலையின் 19 ஆவது விடுதியில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் காலை தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நபர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் இரண்டு மாத சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார் எனவும் சந்தன ஏக்கநாயக்க மேலும் கூறினார். (அ)

# 3 பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, மே 27

பேலியகொடை பிரதேசத்தில் 24 கிலோ கேரளக் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் குறித்த கார் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் சப்-இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றைய இருவரும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் என பொலிஸார் கூறினர். (அ)

# மருந்தில் 30 வீதம் உள்நாட்டிலேயே தயாரிக்க முடிவு!

கொழும்பு, மே 27

நாட்டின் மருந்து தேவையில் 30 வீதத்தை இந்த வருட இறுதிக்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் பல கிராமங்கள் மற்றும் பிரதேசங்களில் புதிதாக மருந்து உற்பத்தி தொழிற்சாலைகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 2 வருடங்களில் நாட்டின் மருந்துகளுக்கான தேவையில் 70 வீதத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டின் மருந்து தேவையில் 17 வீதமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உணவகத்துக்கு ரூ. 45,000 தண்டம்!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் நகரின் ஆனைப்பந்தியில் பழுதடைந்த உணவை விற்ற உணவகத்துக்கு 45 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி இந்த உணவகம் யாழ். மாநகர சுகாதார பரிசோதகரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அங்கு பழுதடைந்த உணவுகள் மீட்கப்பட்டதுடன், சுகாதார சீர்கேடுகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதையடுத்து, உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. உணவக உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதிமன்றம், சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்பட்டமையால் உணவகத்தை திறக்க அனுமதியளித்தது. (ஐ-03)

ஈழநாடு

முரளிதரன் காசி விஸ்வநாதன்

# தமிழக செங்கோல்: ஆட்சி மாற்ற அடையாளமாக நேருவிடம் மவுன்ட்பேட்டன் அளித்ததாக சொல்வது உண்மையா?

இந்தியா சுதந்திரம் அடைந்த தருணத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தால் நேருவுக்கு வழங்கப்பட்ட செங்கோல் இந்தியாவின் புதிய நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதிகாரம் கைமாறுவதன் அடையாளமாக, மவுன்ட்பேட்டனிடம் இருந்து அதைப் பெற்று அளித்ததாகச் சொல்லப்படும் தகவல் உண்மையா?

இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டடம் 2023ஆம் ஆண்டு மே 28ஆம் தேதி திறக்கப்படவுள்ளது. இந்தப் புதிய நாடாளுமன்ற கட்டடத்தில், செங்கோல் ஒன்று பிரதானமான இடத்தில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த செங்கோலின் பின்னணி குறித்து, செய்தியாளர்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஒரு சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, "இந்தியா சுதந்திரமடையும் நாள் நெருங்கிய போது, மவுன்ட்பேட்டன் பிரபு பண்டித ஜவஹர்லால் நேருவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர்களுக்கு ஆட்சியைக் கை மாற்றியளிப்பதைக் குறிக்க எந்த நிகழ்வை மேற்கொள்ளலாம்.

இதையடுத்து நேரு, ராஜாஜியின் உதவியை நாடினார். ராஜாஜி, சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சியை உயர் குருமார்களின் ஆசியுடன் ஒரு மன்னனிடமிருந்து மற்றோர் மன்னனுக்கு மாற்றிய வழிமுறையை அடையாளம் கண்டார். ஒரு மன்னனிடமிருந்து மற்றோர் மன்னனுக்கு ஆட்சி ஒப்படைக்கப்பட்டதற்கு செங்கோல் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது.

ராஜாஜி தஞ்சாவூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீனத்தை அணுகினார். ஆதீனகர்த்தர் உடனடியாக ஐந்தடி நீளத்தில் செங்கோல் தயாரிக்க உத்தரவிட்டார். சென்னையின் உம்மிடி பங்காரு செட்டி ஜுவல்லர்ஸ் செங்கோலை வடிவமைத்தார்கள்.

ஆகஸ்ட் 14ஆம் தேதியன்று மூன்று பேர் செங்கோலை எடுத்துக்கொண்டு பிரத்யேகமான விமானத்தில் வந்தார்கள். ஆதீனத்தின் துணைத் தலைவர், நாதஸ்வர வித்வான் ராஜரத்தினம் பிள்ளை, ஓதுவார் ஆகியோர்தான் அந்த மூவர்.

மடாதிபதி மவுன்ட்பேட்டன் பிரபுவிடம் கொடுத்து பின்பு அவரே வாங்கிக்கொண்டார். பிறகு நேருவிடம் கொடுப்பதற்காக அந்தச் செங்கோல் அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. உயர் குருமார்களால் குறிப்பிடப்பட்ட தேவாரப் பாடல் பாடப்பட்டது. நேரு இதைப் பெற்றுக் கொண்டார்," என்று அந்த விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### ஜவாஹர் லால் நேருவுக்கு செங்கோல் அளித்த ஆதீனம்

இந்தியா சுதந்திரம் அடைந்த தருணத்தில் திருவாவடுதுறை மடம் ஒரு செங்கோலை நேருவுக்கு வழங்கியது. இதுதொடர்பான பத்திரிகைச் செய்தி ஆதாரங்களும் புகைப்பட ஆதாரங்களும் உள்ளன. இந்தப் புகைப்படத்தில் நெற்றியில் திருநீற்றுடன் செங்கோலைப் பிடித்தபடி நேரு நிற்கிறார் (படம்).


ஆனால், இந்திய நிர்வாகத்தின் அதிகாரம் பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர்களுக்கு கைமாறுவதன் அடையாளமாக செங்கோல் மவுன்ட்பேட்டனிடம் கொடுக்கப்பட்டு, அது நேருவிடம் கொடுக்கப்பட்டதா என்பதற்குச் சரியான ஆதாரங்கள் இல்லை. இது போன்றதோர் ஆலோசனையை ராஜாஜி வழங்கினார் என்பதற்கும் தெளிவான ஆதாரங்கள் கிடையாது.

இந்த செங்கோல் நேருவுக்கு வழக்கப்பட்டது குறித்து அமெரிக்காவிலிருந்து வெளியாகும் ரைம்ஸ் பத்திரிகையின் 1947 ஆகஸ்ட் 25ஆம் தேதியிட்ட இதழ் பின்வருமாறு விவரிக்கிறது:

"கடவுள் நம்பிக்கை குறித்து உறுதியான நிலைப்பாடில்லாத ஜவாஹர்லால் நேரு, இந்தியாவின் பிரதமராவதற்கு முந்தைய நாள் மாலையில், ஆன்மிக உணர்வில் வீழ்ந்தார்.

தென்னிந்தியாவின் தஞ்சாவூரிலிருந்த ஒரு மடத்தின் தலைவரான சிறி அம்பலவான தேசிகரின் இரண்டு தூதர்கள் வந்திருந்தார்கள். இந்தியர்களின் உண்மையான அரசின் முதல் தலைவரான ஜவாஹர்லால் நேரு, பழங்கால இந்திய அரசர்களைப் போல இந்து புனிதத் துறவிகளிடமிருந்து அதிகாரத்தின் சின்னத்தைப் பெற வேண்டுமென அம்பலவான தேசிகர் கருதினார்.

அந்தத் தூதர்களுடன் நாதஸ்வர வித்வான் ஒருவரும் வந்திருந்தார். ஒரு பழைய போர்டு காரில் ஆகஸ்ட் 14ஆம் தேதி மாலை நேருவின் வீட்டை நோக்கி அவர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். அப்படிச் செல்லும்போது



ஒவ்வொரு நூறடிக்கும் இடையில் நின்று சுமார் 15 நிமிடங்கள் நாதஸ்வரத்தை வாசித்தார். மற்றொருவர் ஒரு பெரிய வெள்ளித்தட்டைத் தாங்கி வந்தார். அந்த வெள்ளித்தட்டில் ஜரிகையுடன்கூடிய பீதாம்பரம் இருந்தது.

நேருவின் வீட்டை இறுதியில் அடைந்தவுடன் நாதஸ்வர வித்வான் தனது நாதஸ்வரத்தை வாசிக்க ஆரம்பித்தார். மற்றவர்கள் நேருவின் அழைப்பிற்காகக் காத்திருந்தார்கள்.

பிறகு அவர்கள் அந்த வீட்டினுள் நுழைந்தார்கள்.



அப்போது அவர்களுக்கு மானின் ரோமத்தால் செய்யப்பட்ட விசிறியைக் கொண்டு இருவர் விசிறினார்கள்.

ஒரு சன்னியாசியிடம் ஐந்தடி உயரமுள்ள தங்க முலாம் பூசப்பட்ட 2 அங்குலம் கனமான செங்கோல் இருந்தது. தஞ்சாவூரிலிருந்து எடுத்து வந்த புனித நீரை நேருவின் தலையில் ஒருவர் தெளித்தார்.

நேருவின் நெற்றியில் விபூதி பூசப்பட்டது. நேருவுக்கு பீதாம்பரத்தைப் போர்த்தி, செங்கோலை அவர்கள் வழங்கினார்கள். அன்று காலையில் நடராஜருக்குப் படைக்கப்பட்டு, விமானத்தில் கொண்டுவரப்பட்ட பிரசாதமும் அவருக்கு வழங்கப்பட்டது," என விவரிக்கிறது ரைம்ஸ் இதழ்.

அந்த இதழின் விவரிப்பின்படி, அதிகாரம் கை மாறியதன் அடையாளமாக துறவிகளிடமிருந்து செங்கோலை நேரு பெற்றுக்கொள்ள வேண்டுமென சிறி அம்பலவாண தேசிகர்தான் கருதியிருக்கிறார். அதேபோல, நேரடியாக அம்பலவாண தேசிகரிடமிருந்து செங்கோல் நேருவிடம்தான் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற தருணத்தை மிக நுணுக்கமாக விவரிக்கும் நூல் டொமினிக் லாப்பியரும் லாரி காலின்சும் சேர்ந்து எழுதிய **The Freedom at Midnight.**

இந்தப் புத்தகத்திலும் நேருவுக்கு செங்கோல் வழங்கப்பட்ட தகவல் இடம்பெற்றுள்ளது. "14 ஆகஸ்ட் 1947" என்ற தலைப்பிலான அத்தியாயத்தில், ரைம்ஸ் இதழில் கூறப்பட்டது போன்றே இந்தச் சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதிலும் ராஜாஜியின் ஆலோசனை குறித்தோ, மவுன்ட்பேட்டனிடம் செங்கோலை அளித்து, திரும்பவும் நேருவிடம் கொடுத்ததாகவோ தகவல் இல்லை.

ஆகஸ்ட் 15ஆம் தேதி வெளியான இந்து நாளிதழ், ஆகஸ்ட் 14ஆம் தேதி என்னவெல்லாம் நடந்தது என்பதை வெளியிட்டிருந்தது. அதன்படி, ஆகஸ்ட் 14ஆம் தேதி, வியாழக்கிழமை நள்ளிரவு இந்திய அரசமைப்பு அவையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கூட்டம் கூடியது.

அதில் அரசமைப்பு அவையின் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் உரையாற்றினார். இதற்குப் பிறகு, அவையின் உறுப்பினர்கள் தங்களது சேவையை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்து உரையாற்றினார். அந்தத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு இந்திய பெண்களின் சார்பாக திருமதி ஹன்சா மேத்தா, தேசியக் கொடியைக் கையளித்தார்.

இதையடுத்து அவை, வெள்ளிக்கிழமை காலைக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதில் மவுன்ட்பேட்டனிடமிருந்து நேரு செங்கோல் பெற்ற நிகழ்வு ஏதும் இடம்பெறவில்லை.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முந்தைய சில தினங்களில், இந்தியாவின் முக்கியத் தலைவர்களின் மனதில் பிரிவினையால் ஏற்படும் கலவரம் குறித்த கவலைகளே பெரும்பாலும் இருந்தன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# செங்கோலை பாராளுமன்ற புதிய கட்டடத்தில் நிறுவுகிறார் பிரதமர் மோடி

## எதிர்க்கட்சிகள் கூட்டாக புறக்கணிக்க முடிவு!

புதிய நாடாளுமன்ற கட்டடம் திறப்பு விழா காண கோலாகலமாக தயாராகி வருகிறது. திறப்பு விழாவின் போது நாடாளுமன்றத்திற்குள் செங்கோலை பிரதமர் மோடி நிறுவுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நாடாளுமன்றத்தை குடியரசுத் தலைவர்தான் திறந்து வைக்க வேண்டுமே தவிர, பிரதமர் அல்ல என்று விமர்சித்து, திறப்பு விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன. சாவர்க்கர் பிறந்த நாளன்று திறப்பு விழாவை நடத்துவதா என்பதும் அக்கட்சிகள் முன்வைக்கும் கேள்வி.

பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட தற்போதைய நாடாளுமன்ற கட்டடம் நூற்றாண்டை நெருங்கும் நிலையில், புதிய கட்டடம் கட்டுவதற்கு 2020-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இது நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, புதிய நாடாளுமன்ற கட்டடத்தில், மக்களவையில் 888 உறுப்பினர்களும், மாநிலங்களவை 300 உறுப்பினர்களும் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த கட்டடத்தை பிரதமர் மோடி வரும் 28-ம் தேதி திறந்துவைப்பார் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்ததுமே, அதற்கு எதிர்ப்பு கிளம்பிவிட்டது. குறிப்பாக, கர்நாடக தேர்தல் வெற்றியால் புது உத்வேகம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி கடும் விமர்சனங்களை முன்வைத்தது. "நாடாளுமன்ற கட்டடத்தை குடியரசு தலைவர்தான் திறந்து வைக்க வேண்டுமே தவிர, பிரதமர் அல்ல" என்று ராகுல் காந்தி ட்வீட் செய்தார்.

அவரது கருத்தை ஆமோதித்த, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, இந்திய கம்யூனிஸ்டு பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் திறந்து வைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். அத்துடன்,



திறப்பு விழாவுக்கு சாவர்க்கர் பிறந்தநாளான மே 28-ம் தேதியை தேர்வு செய்ததையும் அவர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளை மத்திய அரசு நிராகரித்துள்ளது. டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வரும் 28-ம் தேதியன்று புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிப்பார் என்று முறைப்படி அறிவித்தார்.

அத்துடன், சுதந்திரத்தின் போது ஆட்சி மாற்றத்தின் அடையாளமாக பிரிட்டிஷாரிடம் இருந்து நேரு பெற்றுக் கொண்ட செங்கோல் புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் நிறுவப்படும் என்று அவர் தெரிவித்தார். மக்களவை சபாநாயகரின் இருக்கைக்கு அருகே செங்கோலை பிரதமர் மோடி நிறுவுவார் என்றும் அமைச்சர் அமித்ஷா கூறினார்.

இதைத் தொடர்ந்து, புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவை புறக்கணிப்பதாக 19 எதிர்க்கட்சிகள் சேர்ந்து கூட்டாக அறிவித்துள்ளன. இதுதொடர்பாக அக்கட்சிகள் சார்பில் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

### காங்கிரசுடன் ஓரணியில் ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ்

கர்நாடக தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் டெல்லியில் வேகமாக மாறும் அரசியல் காட்சிகளின் நீட்சி, புதிய நாடாளுமன்ற திறப்பு விழா விவகாரத்திலும் பிரதிபலிக்கிறது. பாரதிய ஜனதாவுக்கு எதிரான தேசிய அரசியலில் காங்கிரசுடன் சேராமல் விலகியே நின்ற ஆம் ஆத்மியும், திரிணாமுல் காங்கிரசும் இம்முறை சத்தமின்றி ஒரே அணியில் இணைந்துள்ளன. திமுக, வி.சி.க., ம.தி.மு.க, சிவசேனா, சமாஜ்வாதி, மத சார்பற்ற ஜனதா தளம், ராஷ்டிரிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் மற்றும் இடது சாரிகள் என 19 கட்சிகள் ஒன்றாக சேர்ந்து இந்த புறக்கணிப்பு முடிவை எடுத்துள்ளன.

### எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு வேண்டுகோள்

புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவை புறக்கணிக்கும் முடிவை எதிர்க்கட்சிகள் கைவிட வேண்டும் என்று மத்திய அரசு தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக டெல்லியில் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, 'இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு. அரசியல் செய்வதற்கான நேரம் இதுவல்ல. புறக்கணித்தலும், புதுப்புது பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருப்பதும் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்து, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வில் பங்கேற்க வேண்டும் என்று அவர்களை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், எதிர்க்கட்சிகளின் ஆட்சேபனைகளை மீறி வரும் 28-ம் தேதி புதிய நாடாளுமன்ற கட்டடம் திறப்பு விழா காண்பது உறுதியாகிவிட்டது.

பிரிட்டிஷாரிடம் இருந்து இந்தியா விடுதலை பெறும் நிகழ்வில் இடம்பிடித்த சோழர் கால செங்கோல், இந்திய ஜனநாயகத்தின் அடுத்தக்கட்ட வரலாற்று நிகழ்விலும் இடம் பிடிக்கிறது. அத்துடன் புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கவும் போகிறது. ●

# தமிழக செங்கோல்:...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசப் பிரிவினையை எப்படி எதிர்கொள்வது, அதனால் புலம்பெயர்ந்து வரும் மக்களுக்கு என்ன வசதிகளைச் செய்வது, இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டால் என்ன செய்வது என்ற கவலைகளே மவுன்ட்பேட்டன், நேரு, வல்லபாய் படேல், ராஜாஜி ஆகியோருக்கு இருந்தது.

ராஜாஜியின் சரிதையை ராஜ்மோகன் காந்தி எழுதியிருக்கிறார். அதில் சுதந்திரத்திற்கு முந்தைய சில தினங்களைப் பற்றிப் பின்வருமாறு சொல்லப்படுகிறது: சுந்திரத்திற்குச் சில நாட்கள் முன்பாக வங்கம் பெரும் கொந்தளிப்பாக இருந்தது. அப்போதைய ஆளுநரான பரோஸ் இங்கிலாந்து திரும்ப முடிவுசெய்து விட்டார்.

புதிய ஆளுநராக யாரை நியமிப்பது என்ற விவாதம் தீவிரமாக இருந்தது. ராஜாஜி கோபாலசாமி ஐய்யங்கார் பெயரைச் சொன்னார். ஆனால், அவர் சொந்தப் பிரச்னைகள் காரணமாக அந்தப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். இதையடுத்து வல்லபபாய் படேல், ராஜாஜிதான் வங்கத்தின் புதிய ஆளுநராக இருக்க வேண்டும் என்றார். இதற்கு நேருவும் மகாத்மாவும் ஒப்புக்கொண்டனர்.

ஆனால், அதிகாரமற்ற பதவி என்பதால் இதை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியுமென யோசித்தார் ராஜாஜி. இதற்கிடையில் மறுபடியும் வங்கத்தில் வெடித்த கலவரத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

நேருவை அணுகிய ராஜாஜி, நிர்வாக அதிகாரமின்றி கலவரங்களை தன்னால் எப்படி கட்டுப்படுத்த முடியும் என மீண்டும் கேட்டார். 'என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? இந்த நாட்டில் எந்தக் காரியமானாலும் ஏற்று வெற்றிபெறக் கூடியவர் நீங்கள்" என்று பதிலளித்தார்.

இதையடுத்து வங்கத்தின் ஆளுநராகப் பதவியேற்க ஆகஸ்ட் 14ஆம் தேதியே புறப்பட்டுச் சென்றுவிட்டார் ராஜாஜி.

சுதந்திர தினத்தன்று அவர் கல்கத்தாவில் இருந்த ஆளுநர் மாளிகையில்தான் இருந்தார். இதில் எங்கேயுமே, அதிகாரத்தை எப்படி கைமாற்றுவது என்பது குறித்த விவாதங்கள் நடந்ததாகக் குறிப்பிடவில்லை.

ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள் விமானத்தில் சென்று, செங்கோலை நேருவிடம் அளித்ததாகத் தெரிய வருகிறது. கோவில் பிரசாதத்தையும் அவர்கள் நேருவுக்கு அளித்துள்ளனர். ஆகவே, அவர்கள் ஆகஸ்ட் 14ஆம் தேதிதான் விமானத்தில் தில்லி வந்திருக்க வேண்டும்.

அன்றைய தினம், இந்தியாவின் வைசிராயின் நிகழ்ச்சி நிரலின்படி அவர் பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்தார். அன்று பாகிஸ்தானுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதால், அவர் அந்த விழாவில் பங்கேற்கச் சென்றிருந்தார்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சுதந்திரம் வழங்கப்படவுள்ள ஆகஸ்ட் 14, 15 தேதிகளில் வைசிராயின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது ஜூலை 10ஆம் தேதியே முடிவு செய்யப்பட்டது.

சதாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ள இது தொடர்பான மவுன்ட்பேட்டன் பிரபு ஆவணங்களின்படி, காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு, 11.30 மணிக்கு கராச்சியை வந்தடைந்தார் வைசிராய்.

சுதந்திர தின நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, மூன்றரை மணிக்கு கராச்சி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு, மாலை ஏழு மணிக்குத்தான் தில்லி வந்தடைந்தார் மவுன்ட்பேட்டன்.

அதிகாரம் கைமாறும் நிகழ்வுகளைப் பொறுத்தவரை, யூனியன் ஜாக் கொடியை இறக்குவது, இந்தியாவின் புதிய தேசியக் கொடியை ஏற்றுவது குறித்தே பல ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

அதன்படியே, இந்தியா சுதந்திரம் பெற்று, டொமினியன் அந்தஸ்து பெற்ற நாடாக மாறியதைக் குறிக்கும் விதமாக யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு, தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

புகைப்பட ஆதாரங்களைப் பார்த்தாலும், ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள் நேருவிடம் செங்கோல் அளிக்கும் புகைப்படங்கள் உள்ளனவே தவிர, மவுன்ட்பேட்டனிடம் செங்கோலை அளித்து, திரும்பப் பெறுவது போன்ற புகைப்படங்கள் இல்லை.

### அதற்குப் பிறகு இந்தச் செங்கோல் என்ன ஆனது?

பொதுவாக பிரதமர்களுக்கு அளிக்கப்படும் செங்கோல், அரசிடம் அளிக்கப்பட்டுவிடும். ஆனால், இந்தச் செங்கோல் என்ன ஆனது என்பது குறித்து நீண்ட நாட்களாகத் தெரியாமல் இருந்தது. 2018இல் திருவாவடுதுறை ஆதீனத்தில், நேருவிடம் செங்கோல் வழங்கும் புகைப்படத்தைப் பார்த்த சிலர், அதை வெளிப்படுத்த வார இதழ் ஒன்றில் அதுதொடர்பான கட்டுரை ஒன்று வெளியானது. அந்தக் கட்டுரையில், இந்தச் செங்கோல் சென்னையில் உள்ள உம்மிடி பங்காரு ஜூவல்லர்ஸ் கடையில் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த உம்மிடி பங்காரு ஜூவல்லர்ஸை சேர்ந்தவர்கள், இந்த செங்கோல் எங்கே உள்ளது எனத் தேட ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக இந்தியாவில் உள்ள பல அருங்காட்சியகங்களுக்கும் கடிதங்களை அனுப்பினர். பல மாதங்கள் கழித்து, அலகாபாத்தில் உள்ள அருங்காட்சியகம் அது போன்ற செங்கோல் ஒன்று தங்களிடம் இருப்பதாகக் கடிதம் ஒன்றை அனுப்பினர். பிறகு, மூன்று மாதம் கழித்து அதன் புகைப்படத்தையும் அனுப்பினர்.

இதைப் பார்த்த உம்மிடி பங்காரு ஜூவல்லர்சை சேர்ந்தவர்கள், அந்த அருங்காட்சியகத்திற்குச் சென்றனர். அங்கே இந்தச் செங்கோல் நேருவின் கைத்தடி என்று குறிப்பிடப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

அந்தச் செங்கோலின் பின்னணியை அருங்காட்சிகத்திற்கு விளக்கிய நகைக்கடை நிறுவனத்தார், சென்னை திரும்பிய பிறகு அது தொடர்பான வீடியோ ஒன்றை உருவாக்கி வாட்ஸ்அப்பில் பகிர்ந்தனர்.

"இந்த வீடியோ வைரலானது. அதை முக்கியமான சிலர் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் பிரதமரின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றுள்ளனர். பிரதமர் அலுவலகம் இதன் உண்மைத் தன்மையை விசாரித்துவிட்டு, தற்போது இதை நாடாளுமன்றத்தில் வைக்க முடிவு செய்துள்ளது," என்கிறார் உம்மிடி பங்காரு ஜூவல்லர்சின் மேனேஜிங் பார்ட்னரான அமரேந்திரன் உம்மிடி.

இந்தச் செங்கோலை உருவாக்க எவ்வளவு செலவானது, எவ்வளது தங்கம் தேவைப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் உம்மிடி பங்காரு ஜூவல்லர்ஸிடம் தற்போது இல்லை. தற்போது, அதேபாணியில் ஒரு செங்கோலை செய்திருக்கிறது உம்மிடி பங்காரு ஜூவல்லர்ஸ். ●

# நிலவின் கர்ப்பங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று

காரைதீவு, மே 27

காரைதீவின் இளங்கவிஞர் விபுலசசியின் நிலவின் கர்ப்பங்கள் கவிதைநூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் காரைதீவில் நடைபெற உள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற உள்ள விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிக்கிறார்.

தாதிய உத்தியோகத்தரான மனோகரன் சசிப்பிரியனின் கன்னி கவிதை நூல் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




# இலவச குடிதண்ணீர் வழங்கல் உடன் விண்ணப்பிக்க அறிவுறுத்து!

கிளிநொச்சி, மே 27

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி - கரைச்சி பிர தேச செயலக பிரிவின் பாரதி புரம், பொன்னகர் கிராமங்க ளுக்கான இலவச குடிதண் ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவையை மேற்கொண்டுள்ளது.

பொன்னகர், பாரதிபுரம் கிராமங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நடமாடும் சேவை மூலம் இலவச குடிதண்ணீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங் களை பெற்று பூரணப்படுத்தி 1500 ரூபாய் வைப்பு பணத் துடன் இதுவரை விண்ணப்ப படிவங்களை செலுத்தாதவர்கள், உடனடியாக எதிர் வரும் செவ்வாய்கிழமைக்கு முன்னதாக விண்ணப்ப படிவங்களை பெற்று பூரணப்படுத்தி 155 ஆம் கட்டை ஏ9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்ப கல் 2 மணிவரை 1500 ரூபாயை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் வீடுகளுக்கான இலவச குழாய் வழி குடிதண்ணீர் இணைப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இச் சந்தர்ப்பத்தை தவறாது பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அல்-ஹிதாயா மகாவித்தியாலய ஆராதனை அரங்குக்கு அடிக்கல்

நிந்தவூர், மே 27

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வீரத்திடல் அல்-ஹிதாயா மகா வித்தியாலய ஆராதனை அரங்குக்கான அடிக்கல் நாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ஏ.எம் முனாசிர், நற்பிட்டிமுனை அல் - கரீம் பவுண்டேஷன் தலைவர் சி. எம். ஹலீமிடம் பாடசாலைக்கு அவசிய தேவையாகக் காணப்படும் ஆராதனை அரங்கின் தேவை குறித்து கேட்டுக் கொண்டதற்கு இணங்க அல் -கரீம் பவுண்டேஷன் அமைப்பானது இந்த அரங்கை அமைத்துக் கொடுப்பதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் திருமதி ஏ .எம். முனாசிர் தலைமையில் நேற்று நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழா வைபவத்தில் அல்-கரீம் பவுண்டேஷன் பணிப்பாளர் சி. எம் ஹலீம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்வில் பாடசாலை முகாமைத்துவ குழு, ஆசிரியர்கள் ஆசிரியர்கள், மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(அ-06)



# இலவச குடிதண்ணீர் வழங்கல் உடன் விண்ணப்பிக்க அறிவுறுத்து!

கிளிநொச்சி, மே 27

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி - கரைச்சி பிர தேச செயலக பிரிவின் பாரதி புரம், பொன்னகர் கிராமங்க ளுக்கான இலவச குடிதண் ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவையை மேற்கொண்டுள்ளது.

பொன்னகர், பாரதிபுரம் கிராமங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நடமாடும் சேவை மூலம் இலவச குடிதண்ணீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங் களை பெற்று பூரணப்படுத்தி 1500 ரூபாய் வைப்பு பணத் துடன் இதுவரை விண்ணப்ப படிவங்களை செலுத்தாதவர்கள், உடனடியாக எதிர் வரும் செவ்வாய்கிழமைக்கு முன்னதாக விண்ணப்ப படிவங்களை பெற்று பூரணப்படுத்தி 155 ஆம் கட்டை ஏ9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை 1500 ரூபாயை செலுத் துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் வீடுகளுக்கான இலவச குழாய் வழி குடிதண்ணீர் இணைப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இச் சந்தர்ப்பத்தை தவறாது பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)






# கிழக்கு புதிய ஆளுநரின் வருகை மூவின மக்களுக்கும் நம்பிக்கை!

## நிவாரணம் வழங்கும் நிகழ்வில் ஜெயசிறில்

காரைதீவு, மே 27

**"கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களது வருகை கிழக்கில் உள்ள மூவின மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. அவரது நல்ல செயற்பாடுகள் அனைத்திற்கும் நாம் பக்கபலமாக நிற்போம்."**

-இவ்வாறு புதிய ஆளுநரின் மனிதாபிமான நிவாரண உதவியை வழங்கி வைத்து உரையாற்றிய காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் சீனாவின் அனுசரணையூடான மனிதாபிமான உலர் உணவு நிவாரண பொதிகளை விதவை தாய்மார்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காரைதீவில் இடம் பெற்றது .

சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிவாரணம் வழங்கல் நிகழ்வில் முன்னாள் தவிசாளர் மேலும் உரையாற்றுகையில்-



கடந்த 33 வருடங்களாக மாறிமாறி வந்த ஆளுநர்கள் தமிழ் மக்களின் உரிமைகளோடு விளையாடியதை நாங்கள் மறக்கவில்லை. தொல்பொருள் என்ற ரீதியிலும் பொது தேவை என்ற ரீதியிலும் தமிழ் மக்களின் காணிகள் நிலங்கள் சூறையாடப்பட்ட வரலாறு இருந்தது .

அது மாத்திரமல்ல அதிகாரிகள் மட்டத்திலும் தான்தோன்றித்தனமாக நடக்க அது வழிவகுத்தது.

இன்று மூவின மக்களாலும் நேசிக்கப்படுகின்ற முதல் தமிழராக செந்தில் தொண்டமானவர்கள் வருகை தந்து ஒரு வார காலத்துக்குள் இந்த நிவாரண பொதிகள் வசதி குறைந்த ஏழைகளுக்கு வழங்கப்படுவது உண்மையிலேயே வரவேற்புக்கு உரியது. இது நல்லதொரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவரோடு இணைந்து நல்ல பணிகளுக்கு நாங்களும் கரம் கோர்ப்போம். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண் நல்லவர்களோடு நல்ல விடயங்களுக்காக என்றும் பயணிக்கும்-என்றார்.

22 விதவை தாய்மார்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

# கிராம சக்தியினுடாக சுயதொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவிகள்



அம்பாறை, மே 27

திருக்கோவில் பிரதேசத்தில் அரசின் கிராம சக்தி திட்டத்தின் ஊடாக திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் 13 பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டன.

இவ் கடனுதவி சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தி கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்குடன் அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் 03 கிராம சேவையாளர் பிரிவில் செயற்பட்டுவரும் இளந்தளிர் கிராம சக்தி சங்கத்தின் ஊடாக 13 சுயதொழில் முயற்சியாளர்களுக்கு சுமார் 12 இலட்சத்து 20ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கில் கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்டம் இன்று ஆரம்பம்

நிந்தவூர், மே 27

கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் ஆலோசனையிலும் அவரது தலைமையிலும் மாகாண மட்டத்திலான கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு இனங்க மாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் பிரதேச செயலகங்களின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டத்தை இன்று சனிக்கிழமை வெற்றிகரமாக முன்னெடுக்கவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பிரதேச ரீதியாக பொது அமைப்புக்கள் விளையாட்டுக்கழகங்கள் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் பொலிஸ், இராணுவத்தினர் பங்குபற்றி கடற்கரைப் பிரதேசங்களை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்படி நிந்தவூர் பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச செயலகத்தின் பங்களிப்புடன் இன்று நடைபெறும் கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது.

நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் திருமதி. ரி.பரமேஸ்வரன் தலைமையில் நிந்தவூர் கடற்கரைப் பூங்கா முன்றலில் இந்த வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பன நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பைசால் காசிம், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லதீப், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

குறித்த கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று பிரதேச சபை செயலாளர் திருமதி ரி. பரமேஸ்வரன் தலைமையில் நேற்று பிரதேச சபை மண்டபத்தில், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டத்தினை கௌரவ ஆளுநரின் எண்ணக்கருவிற்கு அமைய வெகு சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஏகமனதாக முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-06)

# இந்தியத் தூதுவர் பாக்லேயுடன் கிழக்கு ஆளுநர் செந்தில் பேச்சு



திருமலை, மே 27

இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற்றும் பிரதி தூதுவர் ஜேக்கப் ஆகியோருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விரிவான கலந்துரையாடலை நேற்று முன்தினம் மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய இந்திய வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.


கிழக்கில் உள்ள இந்திய நிறுவனங்கள், தமது நலன்புரிக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை கிழக்கில் உள்ள நலிவடைந்த மக்களுக்கு வழங்க இந்திய தூதரகம் உதவி செய்யவேண்டும் என்றும் ஆளுநர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

மேலும் அலையன்ஸ் எயார் சேவையை யாழ்ப்பாணத்தில் இருந்து கிழக்கு விமான நிலையங்களுக்கு நீடிக்கவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்துடன், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் போன்று கிழக்கிலும் ரயில் பாதையை மேம்படுத்துவதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கிழக்கில் புதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



கொழும்பு, மே 27

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், கிழக்கு மாகாண புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று, வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க-இலங்கை உறவுகள் மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதற்கும் மாகாணத்தின் பலதரப்பட்ட சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் கலந்துரையாடப்பட்டது என்று ஜூலி சுங் ருவிட் செய்துள்ளார். (அ)

# மரமுந்திரிகை விளைச்சல் மட்டக்களப்பில் வீழ்ச்சி!

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை அறுவடை ஆரம்பித்திருக்கிறது.

இங்கு இம்முறை மரமுந்திரிகைச் செய்கை விளைச்சல் பெரும் வீழ்ச்சியைத் தந்திருப்பதாக மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி பெய்த மழை மற்றும் கடுமையான வெப்பமான காலநிலையே இதற்கான காரணமென செய்கையாளர்கள் கூறினர்.

இதனால் பூக்கள் கருகி காய்க்கும் வீதம் பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் இதனால் மரமுந்திரிகை செய்கையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 400 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டதாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபன மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எச்.பி.டி.தயாரத்ன தெரிவித்தார்.



களுவாஞ்சிக்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகளவில் மரமுந்திரிகை செய்யப்பட்டதாகவும் வாழைச்சேனை, கிரான், செங்கலடி மற்றும் வாகரை பிரதேச செயலகப்பிரிவுகளிலும் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# உக்ரைன் போரில் இராணுவ ரீதியாக யாருமே வெற்றி பெறப்போவதில்லை

## அமெரிக்க கூட்டுப்படைகளின் தலைமை தளபதி



நியூயோர்க், மே 27

**உக்ரைனில் ரஷ்யா ஒரு இராணுவ வெற்றியை அடையாது. அதேபோல, உக்ரைனில் உள்ள ரஷ்ய துருப்புக்களையும் தங்கள் பிரதேசத்தில் இருந்து உக்ரைனால் முழுமையாக வெளியேற்ற வாய்ப்பில்லை என்று அமெரிக்கா கூட்டுபடைகளின் தலைமை தளபதி ஜெனரல் மார்க் மில்லி தெரிவித்தார்.**

"இந்தப் போர், இராணுவ ரீதியாக, ரஷ்யாவால் வெல்லப்பட போவதில்லை. இது இல்லை," என்று அவர் தெரிவித்தார்.

உக்ரைன் பாதுகாப்பு தொடர்பு குழுவில்- ராம்ஸ்டீன் மாநாடு- உறுப்பினர்களாக இருக்கும் டசின் கணக்கான நாடுகளின் மெய்நிகர் சந்திப்பின் முடிவில் பத்திரிகையாளர்களிடம் மில்லி இவ்வாறு கூறினார்.

உக்ரைன்அரசாங்கத்தை கவிழ்ப்பது உட்பட ரஷ்யாவின் அசல் மூலோபாய நோக்கங்கள் "இராணுவ ரீதியாக அடைய முடியாதவை" என்று அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனில் நூறாயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் உள்ளனர். ரஷ்ய படைகளிடம் இழந்த அனைத்துப் பகுதிகளையும் மீண்டும் கைப்பற்றும் உக்ரைனின் நோக்கத்தை உடனடியாக சாத்தியமற்றதாக மாற்றும் என்று மில்லி கூறினார்.

"அதாவது சண்டை தொடரும். அது இரத்தக்களரியாக இருக்கும். அது கடினமாக இருக்கும். ஒரு கட்டத்தில், இரு தரப்பினரும் ஒரு தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடத்துவார்கள் அல்லது அவர்கள் ஒரு இராணுவ முடிவுக்கு வரு வார்கள், "என்று அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி விளாடிமிர் புடினின் முக்கிய கூட்டாளியும், ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியுமான டிமிட்ரி மெட்வெடேவ், உக்ரைன் போர் பல தசாப்தங்களாக தொடரலாம் என்றார்.

"இந்த மோதல் மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும், பெரும்பாலும் பல தசாப்தங்களாக நீடிக்கும்," என்று ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் மெட்வெடேவ் வியட்நாம் விஜயத்தின்போது கூறியதாக மேற்கோளிட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு எதிரான போரை தூண்டிவிடும் மேற்கு நட்பு நாடுகள் இதுவரை உக்ரைனுக்கு 65 பில்லியன் டொலர் பாதுகாப்பு உதவி வழங்கியுள்ளனர் என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லாயிட் ஆஸ்டின் கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

(அ)

# சீனாவில் உள்ளங்கை ஸ்கான் செய்து கட்டணம் செலுத்தும் முறை அறிமுகம்!



பீஜிங், மே 27

சீனாவில் தொழில்நுட்பத் துறை முன்னேற்றம் கட்டணம் செலுத்தும் முறைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் பீஜிங் நகரில் உள்ளங்கையை 'ஸ்கான்' செய்து கட்டணம் செலுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக டாசிங் அனைத்துலக விமான நிலையத்திலிருந்து பெய்ச்சிங் செல்லும் ரயில் சேவைக்குக் கட்டணம் செலுத்த அதைப் பயன்படுத்தலாம்.

அதற்கு உள்ளங்கை அடையாள முன்பதிவு அவசியமாகும். ஒருமுறை பதிந்துகொண்டால் போதும். புதுப்பிக்க வேண்டிய தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. வீ சட் செயலி மூலம் அதற்கான அங்கீகாரத்தை நிறைவு செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட சில ரயில் நிலையங்களில் உள்ளங்கை அடையாளப் பதிவுச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உள்ளங்கையைக் கருவியின் மேல் காட்டினால் போதும். ரேகையை ஸ்கேன் செய்து வீசட் கணக்கிலிருந்து பணம் கழித்துக் கொள்ளப்படும்.

உள்ளங்கை ரேகை உறுதி செய்யப்பட்டதும் ரயில் நிலையத்துக்குள் நுழையும் முகப்பின் வழி திறக்கும் என்று சீனாவின் ரென்சென்ற் நிறுவனம் கூறியது.

பயனாளர்களின் தகவல்களைப் பாதுகாக்க தரவு மறைக்கும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. (அ)

# இம்ரான் கான் வெளியேற தடை!



இஸ்லாமாபாத், மே 27

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அவரது மனைவி புஸ்ரா பீவி மற்றும் இம்ரான் கானின் பி.டி.ஐ கட்சியைச் சேர்ந்த 80 பேர் பாகிஸ்தானில் இருந்து வெளியேற தடை விதித்து ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

இம்ரான் கான், அவரது புஷ்ரா பீவி மற்றும், பி.டி.ஐ கட்சி தலைவர்கள் முராத் சயீத், மலீகா புகாரி, பவாத் சௌத்ரி மற்றும் ஹம்மாத் அசார், காசிம் சூரி, ஆசாத் கைசர், யாஸ்மின் ரஷீத் மற்றும் மியான் அஸ்லாம் உள்ளிட்டோர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஷெபாஸ் ஷெரீப் அரசு எதிராக உச்ச நீதிமன்றத்தில் இம்ரான் கான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில், நாட்டின் சில பகுதிகளில் இராணுவச் சட்டம் போன்ற நிலைமை இருப்பதாகவும், தனது கட்சிக்கு எதிரான ஒடுக்குமுறை குறித்து நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# மொங்கோலியாவில் பனிப்புயல் 3 இலட்சம் கால்நடைகள் மரணம்



உலன்பாட்டர், மே 27

கிழக்கு ஆசிய நாடான மொங்கோலியாவில் புயல் காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருவதன் காரணமாக மூன்று இலட்சம் கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொங்கோலியாவில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக சுக்பாதர் மற்றும் கென்டி ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

அங்கு பெய்து வரும் கன மழை காரணமாக ஏராளமான மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் முறிந்து விழுந்து போக்குவரத்து பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் இல்லாததால் பல நகரங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

மேலும், அங்கு கால்நடை மேய்க்க சென்ற 130 இற்கும் மேற்பட்டோர் மாயமானதாக வெளியான தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியில் 125 பேர் இதுவரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு தொடர்ந்து மீட்புப் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(அ)

# சிட்னியில் பெரும் தீ விபத்து! இடிந்தது 7 மாடிக் கட்டடம்!!

சிட்னி, மே 27

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

7 மாடி கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. 100 இற்கும் மேற்பட்ட தீயணைப்புப் படை வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

சர்ரி ஹில்ஸ் பகுதியில் உள்ள 7 மாடி கட்டடத்தில் பாரிய அளவில் தீ விபத்து ஏற்பட்டது.

முதலில் 3 மாடிகளில் மட்டும் தீப்பற்றியுள்ளதுடன் கட்டடம் முழுவதும் பரவியதாக நேரில் பார்க்க மக்கள் தெரிவித்தனர்.

தீ வேகமாக பரவியதால், அருகில் உள்ள கட்டடங்களுக்கும் தீப்பரவியுள்ளது.

இதனால் அந்தப் பகுதி முழுவதும் கடும் புகை மண்டலமாக காட்சியளித்தது.




தீ விபத்தால், 7 மாடி கட்டடம் முற்றிலும் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் இடிந்து விழுந்துள்ளது.

தகவல் கிடைத்ததும் தீயணைப்புப் படை வீரர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 100 தீயணைப்பு வீரர்கள் 20 இயந்திரங்களுடன் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருகில் உள்ள கட்டடங்களில் இருந்தவர்களை அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றினர்.

இந்த தீ விபத்தில் எவருக்கும் எந்த பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஆப்கானுடனான தொடர் ஹசரங்க ஆடுவது சந்தேகம்

கொழும்பு, மே 27

இலங்கையின் சகலதுறை ஆட்டக்காரர் வனிந்து ஹசரங்க உபாதை காரணமாக ஆப்கானிஸ்தானுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் தொடரில் பங்குபற்றுவது உறுதி இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் சார்பாக விளையாடிவந்த அவருக்கு குதிக்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் கடைசி இரண்டு போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் இந்த வருடம் பிரகாசிக்கத் தவறிய வனிந்து ஹசரங்க, 9 போட்டிகளில் 8 விக்கெட்களை கைப்பற்றினார்.

அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை தொடர்பாக இலங்கைகிரிக்கெட் உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை.

ஆப்பகானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் அம்பாந்தோட்டையில் ஜூன் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு முன்பதாக நடைபெறவுள்ள இந்தத் தொடர் இலங்கைக்கு பலப் பரீட்சையாக அமையவுள்ளது. (ஐ)

## அதிக பின்தொடர்பவர்களை பெற்ற ஆசியரானார் கோலி




சென்னை, மே 27

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் விராட் கோலி, சமூக வலைத்தளங்களில் துடிப்பாக இயங்கி வருகிறார். குறிப்பாக இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் அவ்வப்போது தான் செல்லும் இடங்களில் எடுத்த புகைப்படங்களை பகிர்ந்து வருகிறார். இதனால், இன்ஸ்ட்ராகிராமில் விராட் கோலியை கோடிக்கணக்கானோர் பின்தொடர்கின்றனர். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து தற்போது 250 மில்லியனாக உள்ளது.

இதன் மூலம், ஆசியாவிலேயே இன்ஸ்ட்ராகிராமில் 250 மில்லியன் பின்தொடர்பவர்களை பெற்ற முதல் இந்திய பிரபலம் என்ற பெருமையை விராட் கோலி பெற்றார்.

கிறிஸ்ரியானோ றொனால்டோ மற்றும் மெஸ்ஸி அடுத்தபடியாக அதிக பின்தொடர்பவர்களை கொண்ட விளையாட்டு வீரர் என்ற இடத்தையும் விராட் கோலி பெற்றுள்ளார்.

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் வெற்றி அணிக்கு ரூ. 48 கோடி பரிசு!

டுபாய், மே 27

இந்தியா - அவுஸ்திரேலியா இடையே நடைபெறவுள்ள ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனாகும் அணிக்கு 16 இலட்சம் டொலர்கள் - சுமார் 48 கோடியே 37 இலட்சம் ரூபாய் பரிசாக கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் தோல்வி அடையும் அணிக்கு பரிசுத் தொகையில் சரி பாதியான 8 இலட்சம் டொலர் - சுமார் 24 கோடியே 18 இலட்சம் ரூபாய் கிடைக்கும்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பில் பங்குபற்றிய 9 அணிகளுக்கும் மொத்தமாக (38 இலட்சம் டொலர்கள்) சுமார் 114 கோடியே 88 இலட்சம் ரூபாய் பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.

இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெறுவதற்காக நியூசிலாந்துடன் 2 போட்டிகள் டெஸ்ட் தொடரில் பங்குபற்றி தோல்வி அடைந்ததால் 3ஆம் இடத்திலிருந்து 5ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்ட இலங்கைக்கு 9 கோடியே 6 இலட்சம் ரூபாய் கிடைக்கவுள்ளது.

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி லண்டன் ஓவல் விளையாட்டரங்கில் எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.




இந்தப் போட்டியில் 5 நாட்களில் முடிவு கிட்டாவிட்டால் போட்டி 6ஆவது நாள் தொடர்ந்து நடைபெறும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சவுத்ஹம்ப்டனில் நடைபெற்ற ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் 8 விக்கெட்களால் இந்தியாவை வெற்றிகொண்ட கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்துக்கு டெஸ்ட் வெற்றி கோலுடன் இதே தொகை பணப்பரிசு வழங்கப்பட்டிருந்தது.

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2021-23இல் அணிகள் நிலையில் மூன்றாம் இடத்தைப் பெற்ற தென்னாபிரிக்காவுக்கு 13 கோடியே 60 இலட்சம் ரூபாய், நான்காம் இடத்தைப் பெற்ற இங்கிலாந்துக்கு 10 கோடியே 58 இலட்சம் ரூபாய் பணப்பரிசும் கிடைக்கவுள்ளன.

6ஆவது, 7ஆவது, 8ஆவது, 9ஆவது இடங்களில் முறையே உள்ள நியூசிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஆகிய அணிகளுக்கு தலா 3 கோடியே 2 இலட்சம் ரூபாய் கிடைக்கும். (ஐ)

# மகளிர் ஐ. பி. எல். ரி-20 தொடர்

புதுடில்லி, மே 27

இந்தியாவில் தொடங்கப்பட்ட ஆடவருக்கான ஐ. பி. எல். தொடர் 16 ஆண்டுகள் தொடர்ந்து நடைபோட்டு வருகிறது.

இதேபோன்று, மகளிருக்கான இருபது-20 போட்டியை முதன் முறையாக இந்த ஆண்டு இந்திய கிரிக்கெட் சபை வெற்றிகரமாக நடத்தியது.

இதில் மும்பை, பெங்களூர், டில்லி, அகமதாபாத் ,லக்னோ ஆகிய ஐந்து அணிகள் முதல் தொடரில் விளையாடியது. ஐ. பி. எல். போட்டிக்கு இணையாக நடைபெற்ற மகளிர் பிறீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் மும்பை அணி கோப்பையை வென்றது.




இந்நிலையில் மகளிர் பிரீமியர் லீக் தொடரை அடுத்தாண்டு முதல் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் சுழற்சி முறையில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

# பிரெஞ்சு ரென்னிஸ் தொடர் நாளை ஆரம்பமாகின்றது!




பாரிஸ், மே 27

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற களிமண்தரை போட்டியான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் நாளை பாரிஸில் தொடங்குகிறது.

இந்த போட்டியில் யார் - யாருடன் மோதுவது என்பது குலுக்கல் மூலம் நேற்று முடிவு செய்யப்பட்டது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீரரான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) முதல் சுற்றில் தகுதிநிலை வீரரை சந்திக்கிறார்.

22 கிராண்ட்ஸ்லாம் கைப்பற்றிய சாதனையாளர் நோவக் ஜொகோவிச் (சேர்பியா) தனது சவாலை அமெரிக்காவின் அலெக்சாண்டர் கோவாசெவிச்சுடன் தொடங்குகிறார். தடைகளை கடந்து தொடர்ந்து முன்னேற்றம் கண்டால் அரையிறுதியில் ஜோகோவிச் - அல்காரஸ் நேருக்கு நேர் சந்திக்க வேண்டிவரும்.

2ஆம் நிலை வீரர் ரஷ்யாவின் மெத்வடேவ் முதல் சுற்றில் தகுதிநிலை வீரருடன் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைந்துள்ளது.

பிரெஞ்சு ஓப்பனை 14 முறை வென்று கொடிகட்டி பறந்த ஸ்பெயினின் ரபெல் நடால் இந்த தடவை காயத்தால் விலகியுள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் இகா ஸ்வியாரெக் (போலந்து) முதல் சுற்றில் கிறிஸ்ரினா புக்சாவை (ஸ்பெயின்) எதிர்கொள்கிறார். இந்த முறை ஸ்வியாரெக்குக்கு அட்டவணை கடும் சவாலாக தெரிகிறது. அவர் 4ஆவது சுற்றில் முன்னாள் சம்பியன் கிரெஜ்சிகோவாவுடனும் (செக்குடியரசு), அரையிறுதியில் விம்பிள்டன் சம்பியன் எலினா ரைபகினாவுடனும் (கஜகஸ்தான்) மோதும் நிலைமை ஏற்படலாம்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறப்பாக இடம்பெற்ற வில்லிசை அரங்கேற்றம்




யாழ்ப்பாணம், மே 27

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சி. செந்தூரனின் மாணவர் நித்தியானந்தன் மோகனதர்சனின் வில்லிசை அரங்கேற்றம் கடந்த ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

செந்தமிழ் வில்லிசைக் குழு என பெயரிடப்பட்ட இக்குழுவின் அரங்கேற்றம் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வி.எஸ்.பி. துசிதரனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா ந. ஜே. ஞானப்பொன்ராஜா ஆசியுரையையும் வடக்கு மாகாண கல்வித்திணைக்கள அழகியல்துறைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா மதிப்பீட்டுரையையும் வழங்கினர்.

அரங்கக் கலைஞர்களாக விற்குரு - நி.மோகனதர்சன், பக்கப்பாட்டு - பே. பிரசன்னா, விற்கடம் - மு. சுலக்சன், ஹார்மோனியம் - த.றொபேட், மிருதங்கம் - சி. செந்தூரன் ஆகியோர் பங்கேற்றனர்.

விற்குரு மோகனதர்சன் தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பில் வில்லிசை நிகழ்ச்சியில் பங்கேற்று இரண்டு தடவைகள் தங்கப்பதக்கம் பெற்றவர் ஆவார். இவ்வில்லிசை அரங்கேற்ற நிகழ்ச்சி கலாவினோதன் அமரர் சின்னமணிக்கு அர்ப்பணமாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக வங்கி பிரதிநிதிகள் வவுனியாவுக்கு விஜயம்



வவுனியா, மே 27

வவுனியா மாவட்டத்தில் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களை உலக வங்கி பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் இயந்திரங்களையும் வழங்கினர்.

வவுனியா நெளுக்குளத்தில் உள்ள விவசாயத் திணைக்கள கட்டடத்தில் கலப்பினச் சோளம் உற்பத்தியாளர்களைச் சந்தித்த உலக வங்கிப் பிரதிநிதிகள், அவர்களுக்கான இயந்திரத் தொகுதிகளை வழங்கினர்.

இதனையடுத்து அவர்கள் விவசாயிகளுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டனர்.

இதன்போது உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர் ஜோன், வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். அற்புதச்சந்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# திருமணம் செய்வதாக தெரிவித்து நடிகையிடம் ரூ. 65 இலட்சம் மோசடி!

## ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 27

முகநூல் ஊடாக சிங்கள நடிகையொருவருடன் நட்பை ஏற்படுத்திக்கொண்டு திருமணம் செய்வதாக உறுதியளித்து அவரிடமிருந்து 65 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாகக் கூறப்படும் நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேக நபர் கொழும்பு மற்றும் கம்பஹா நீதிமன்றங்களில் கடமையாற்றும் இரண்டு கனிஷ்ட சட்டத்தரணிகளை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி 99 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டும் இருப்பதாக நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடிகை தொடர்பான வழக்கில் சந்தேகநபர் மஹர சிறைச்சாலையின் அதிகாரிகளால் மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த சந்தேகநபர், இரத்தினபுரி, கஹவத்தையைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் மினுவாங்கொடை, பட்டதுவன பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய நடிகையொருவரிடமே பண மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தன்னை சமூக நல ஆர்வலர் எனக் கூறி இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் மற்றும் நடிகர்களுடன் இருக்கும் புகைப்படங்களை முகநூலில் பதிவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணி ஒருவரை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து 55 இலட்சம் ரூபாவும், கம்பஹா நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி 49 இலட்சம் ரூபாவும் மோசடி செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# தப்பிச் சென்ற இராணுவ அதிகாரி துப்பாக்கி ரவைகளுடன் சிக்கினார்!



கொழும்பு, மே 27

சேவையிலிருந்து தப்பிச் சென்ற இராணுவ அதிகாரி ஒருவர் சிலாபம் - கொடகவெல பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் ரி-56 ரக துப்பாக்கி ரவைகளுடன் கைது செய்யப்பட்டார்.

இறக்குவானை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் சட்டவிரோதமாக வைத்திருந்த 340 ரவைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொடகவெல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர் கடமைக்கு சமூகமளிக்காமல் சட்டவிரோதமாக தப்பிச் சென்ற இராணுவ லான்ஸ் கோப்ரல் எனவும், தன்னிடம் இருந்த வெடிமருந்துகளை திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு பணத்திற்காக விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (அ)

# ஓய்வூதியத்தில் மாற்றம் விரைவில் செய்யப்படும்

கொழும்பு, மே 27

அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெற்றபின் வழங்கப்படும் ஓய்வூதியத்தில் இனிவரும் காலங்களில் மாற்றம் செய்யப்படும் என இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவேல் தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவேல் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எதிர்வரும் காலங்களில் எமது அமைச்சின் கீழ் புதிய ஓய்வூதிய முறைமையொன்றை அறிமுகம் செய்யவுள்ளோம்.

மேலும் பங்களிப்பு ஓய்வூதிய முறைமையே புதிய ஓய்வூதியம்.

உலகில் பல அபிவிருத்தியடைந்த நாடுகள் இம்முறையை வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டுள்ளன-என்றார். (அ)

# விடுமுறையில் வீட்டுக்கு சென்ற சிப்பாய் வெட்டிப் படுகொலை!

கொழும்பு, மே 27

விடுமுறையில் வீடு வந்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பண்டாரவளைப் பொலிஸ் பிரிவில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது 37 வயதுடைய எம்.பி. குணரட்ன என்ற இராணுவச் சிப்பாயே சாவடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த இராணுவச் சிப்பாய்க்கும் அயல் வீட்டாருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கொலையில் முடிந்துள்ளது.

கொலையாளி தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கொலையாளியும் உயிரிழந்த இராணுவச் சிப்பாயும் சம்பவம் இடம்பெற்றபோது மதுபோதையில் இருந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இராணுவச் சிப்பாயின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் ஜீப் மீது தாக்குதல்

கொழும்பு, மே 27

சட்டவிரோத மதுபான விற்பனை செய்யும் இடத்தை முற்றுகையிடச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் பயணித்த ஜீப் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஜீப் வண்டியின் முன்பக்க கண்ணாடிக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர்.

டயகம கிழக்கு பிரதேசத்தில் கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் சுற்றிவளைப்பை மேற்கொள்ள பொலிஸார் ஜீப் வண்டியில் சென்றுள்ளனர்.

பிரதேசத்துக்குள் பிரவேசிக்கும் வீதியில் மறைந்த நபர் அல்லது குழு ஜீப் வண்டியின் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளதாக டயகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார்.

கல்வீச்சு தாக்குதலை நடத்திய நபர் அல்லது குழுவை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## பெரிய...

மதிப்பை மட்டுமே கொண்டுள்ளது என்று கோப் குழுவிடம் தெரிவித்தனர்.

அதை வெட்டி மெருகூட்ட முடியாது. இது தொல்லியல் மதிப்பை மட்டுமே கொண்டுள்ளது - என்று கூறப்பட்டது. முன்னதாக, 510 கிலோகிராம் எடையுள்ள இந்த நீல இரத்தினக்கல் மீட்கப்பட்ட போது, இதுவே உலகின் மிகப்பெரிய நீல இரத்தினக்கல் என தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்தது.

அத்துடன், இதன் பெறுமதி பத்து இலட்சம் டொலர் பெறுமதியானது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த இரத்தினக்கல் மதிப்பீட்டுக்காக சுவிற்சர்லாந்துக்கு அனுப்பப்பட்ட பின்னரே, அதன் உண்மையான பெறுமதி வெறும் 10,700 அமெரிக்க டொலர் என்றும் இலங்கை அதிகாரிகள் சொன்னதை போன்ற பெறுமதியை கொண்டிருக்கவில்லை என்பதும் தெரிய வந்தது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிகாரிகள் மக்களை தவறாக வழிநடத்தினர் என்று கோப் தலைவர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கோப் அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, இவ்வாறான பொய்யை கூறுவதன் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிகாரிகளின் தொழில் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஐ)

## இலத்திரனியல்...

பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதன் தாக்கம் அவர்களுக்கு 10 முதல் 12 வயதாகும் போதே தெரியவரும். உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளின்படி, 2 வயது முதல் 5 வயது வரையான குழந்தைகள் தமது பெற்றோரின் கண்காணிப்பின் கீழ் நாளொன்றுக்கு 30 நிமிடங்கள் முதல் ஒரு மணித்தியாலயம் வரை மாத்திரமே இலத்திரனியல் திரையை பயன்படுத்த முடியும்.

இதேநேரம், பதின்ம வயது சிறார் மற்றும் இளைஞர், யுவதிகளின் அதிகரித்த சமூக ஊடகங்களின் பாவனையால் அவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மனித மூளையின் பின் பகுதியில் உள்ள உணர்ச்சி மூளை எனப்படுகிறது. உணர்ச்சிகள் தொடர்பான விடயங்கள் விரைவாக வளரும். அவை மனித விருப்பத்தை அடிப்படையாக கொண்டு செயல்படுகின்றன. இதன்காரணமாக, பதின்ம வயதுடையவர்களின் மூளையில் அறிவுசார் திறன்கள் தொடர்பான பகுதிகள் வளர சிறிது தாமதமாகிறது. அத்துடன், அதிகரித்த சமூக ஊடகங்களின் பாவனையால் அவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படுகிறது- என்றும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு...

சம்பதா சடங்குக்கு நான் செல்ல இருந்தேன். ஆனால், அதற்கு செல்ல முடியவில்லை. இத்தகைய பின்னணியில், சிங்களவர்களை எழ வைக்க வேண்டாம் என்று சம்பந்தன் மற்றும் புலிகளுக்கு ஆதரவளிக்கும் தரப்பினருக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

சிங்களவர்கள் என்பவர்கள் இராவணன், குவேனியின் பரம்பரையைச் சேர்ந்தோர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொழும்பில் இடம்பெற்ற பகுதிக்கு நான் சென்றிருந்தால் அவர்களை காயப்படுத்தி அனுப்பியிருப்பேன்.

இத்தகையவர்களுக்கு நான் இறுதி எச்சரிக்கையை வழங்குகின்றேன். நாட்டில் தேவையற்ற பிரச்னையை உருவாக்க எத்தனித்தால் - இனங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்தால் - வெளிநாட்டில் உள்ளவர்களின் டொலருக்கு ஆசைப்பட்டு, சிங்கள - தமிழ் - முஸ் லிம் என்ற நல்லிணக்கத்தை பிளவுபடுத்த எத்தனித்தால் அவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதற்கும் நாம் தயார் - என்றார். (ஐ)

## இந்திய...

முறைகேடுகளால் தேசிய உற்பத்தி ஏற்றுமதியாளர்களும், முறையான ஏற்றுமதி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறான செயல்பாடுகளால் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கறுப்பு பட்டியலில் சேரும் அவதான நிலை காணப்படுகிறது.

மீன் ஏற்றுமதிக்காக துறைமுகத்தில் தேங்கியுள்ள 39 கொள்கலன்களை இறக்குமதி செய்தது யார்? இந்த மீன் ஏற்றுமதி ஊடாக முறையான பெறுமதி சேர் வரி கிடைக்கப் பெறுகிறதா? என்றும் கேள்வி எழுப்பினார்.

## 146 நாட்களி...

இது தினசரி 1.6வீத அதிகரிப்பாகும். இந்த நிலைமை இலங்கைக்கு ஏற்புடையதல்ல.

“ஆயுதங்கள் சமூகத்திலும் குற்றவாளிகள் மத்தியிலும் புழக்கத்தில் விடப்படுவதைத் தடுப்பதற்கு வெற்றிகரமான வலுவான புலனாய்வு வலையமைப்பை இலங்கை பொலிஸார் விரிவுபடுத்த வேண்டும்”, என்று கூறியுள்ளார். (ஐ)

## உண்மையை...

சொன்னதாக ஆனந்தர் எழுதிய வரிகள்.

அதையே படிக்காதவர் இராகுல தேரர். துவராடை (காவி உடை) அணிந்ததால் தலையை மழித்ததால் பிச்சை எடுப்பதால் பிக்குவானவர்.

தமிழ் பௌத்தரிடம் தையிட்டியைக் கையளிப்பதாக சொல்கிறார்.

இரட்டை மணிமாலையின் ஒன்பதாவது சூத்திரம் சொல்வதென்ன? எவன் ஒருவன் உண்மையை மறுக்கிறானோ அவன் துவராடைக்கு அருகதை அற்றவன்.

தையிட்டியில் அடாத்தாக அபகரித்த நிலம். அதில் புத்த விகாரை. நில உரிமையாளரின் எதிர்ப்பை மீறிக் கட்டிய புத்த விகாரை - இது உண்மை.

யாழ்ப்பாணம் மாவட்டம்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகர் பிரிவு

, யா/250 தையிட்டி தெற்கு நிலதாரி பிரிவு

- கலைவாணி வீதி

முடித்துக் கலட்டி

8 ஏக்கர் காணி

தனியார் காணி

உறுதிக் காணி

12 பேருக்கு சொந்தமான 8 ஏக்கர் நிலம்.

சிந்தோட்டை நந்தர தேரர் தலைமையில் எட்டு ஏக்கர் நிலத்தையும் அடாத்தாகக் கைப்பற்றி (இன்னும் சொல்லப்போனால் களவெடுத்து) விகாரையை கட்டுகிறார்.

அடாத்தாகக் கைப்பற்றிய அல்லது களவெடுத்த நிலத்தில், பிரதேச சபையின் உரிமம் எதுவும் இன்றிக் கட்டிய விகாரையை, இதுவரை உருவாகாத, இல்லாத தமிழ் பௌத்த அமைப்பிடம் கையளிப்பதாகக் கூறுகின்ற பொகவந்தலாவை ராகுல தேரர் புனைதுகில் அணிகின்ற பௌத்தரா? திருஞான சம்பந்தர் சொல்கின்ற எத்தரா?

யாரோ ஒருவருடைய காணி. அடாத்தாகக் கைப்பற்றினார்கள். அங்கே புத்த விகாரையைக் கட்டினார்கள். அந்த விகாரையை இடித்து விடுங்கள். நிலத்தை உரிமையாளரிடம் மீளக் கொடுத்து விடுங்கள்.

இவ்வாறு கூறுபவரே தேரர். தெரிந்தவர், தெளிந்தவர், அறிந்தவர், தம்மபதத்தைப் படித்தவர், தம்மபதம் வழி நடப்பவர்.

தையிட்டியை தமிழ் பௌத்தரிடம் கையளிப்போம் எனக் கூறுகின்ற ராகுலர் தம்மபதத்தின் முதலாவது அத்தியாயம் இரட்டை மணி மாலையின் ஒன்பதாவது சூத்திரத்துக்கு அமைய துவராடையைக் களைவாராக -

முன்பு அணிந்திருந்த பூணூலையும் களைவாராக - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் புவனேஸ்வரன் ஓய்வு!

யாழ்ப்பாணம், மே 27

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக 12 ஆண்டுகள் பணியாற்றிய சரா. புவனேஸ்வரன் எதிர்வரும் 31.05.2023 உடன் ஓய்வு பெறுகின்றார்.

இவர், கடந்த 21.05.2023 அன்று திருகோணமலையில் உள்ள மூதூர் பிரதேசத்தின் ஈச்சிலம்பற்று சண்பக மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக்கூட்டத்தில் நடைபெற்ற புதிய நிர்வாக சபைத் தெரிவோடு பொதுச்செயலாளர் பொறுப்புகளை ஒப்படைத்து தனது ஓய்வை அறிவித்தார்.

2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஏகமனதாக பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட சரா. புவனேஸ்வரன் அவர்கள் அதன் பின்னர் பண்டாரவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் தொடர்ந்தும் பொதுச் செயலாளராக தெரிவானார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராக இருந்த காலத்தில் பொதுச் செயலாளரான இவர் பல்வேறு பணிகளை சிறப்பாக செய்து முடித்தார். இவரது பணி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அவசியமானது என்பதால் சங்க நிர்வாகிகளால் தொடர்ந்தும் சங்கத்தின் ஆலோசகராக இருப்பதற்கு ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டது.

இவரோடு சங்கத்தின் ஆலோசகராக மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னைநாள் தலைவர் க. நல்லதம்பியும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவராக மட்டு. நகரைச் சேர்ந்த க. நிரஞ்சன், பொதுச்செயலாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. கணேசலிங்கம், நிதிச் செயலாளராக, வடமராட்சியைச் சேர்ந்த கி. இந்திரனும், நிர்வாக செயலாளராக மட்டக்களப்பை சேர்ந்த சி. சசிதரன், பத்திரிகை செயலாளராக திருகோணமலையைச் சேர்ந்த ம. சச்சிதானந்தம், பிரசார செயலாளராக மலையகத்தை சேர்ந்த அ. பாலசிங்கம், கல்வி கலாசார செயலாளராக புத்தளத்தைச் சேர்ந்த தெ. சுதர்சன் ஆகியோர் தெரிவாகினர்.

இதேபோன்று, துணைத் தலைவர்களாக திருகோணமலையச் சேர்ந்த இரா. சச்சிதானந்தம், யாழ்ப்பாணத்தை சேர்ந்த ம. சசிகுமார், யாழ்ப்பாணத்தை சேர்ந்த க. வளர்மதி, மன்னாரைச் சேர்ந்த திருமதி அனுலா நிக்ஷன் சொய்ஷா, துணை பொதுச் செயலாளர்களாக கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெ. நிஷாகர், மன்னாரைச் சேர்ந்த பி.ஈ.குருஸ், மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி வி. சிவசங்கரியும் ,

துணை நிதிச் செயலாளர்களாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த செ. சிவபால சுந்தரும், திருமதி ஜெ. சசிலேகாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்தோடு மாகாண தலைவர்கள், செயலாளர்கள் மாவட்டங்களின் தலைவர்கள், செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விவசாயிகளுக்கு உதவுவதற்கு ஜப்பான் அரசு இலங்கைக்கு நிதி

கொழும்பு, மே 27

விவசாயத்துறையின் செயல் திறனை மேம்படுத்தவும் அவர்களுக்கு உதவவும் நம் நாட்டு மதிப்பில் சுமார் 138 கோடியே 88 இலட்சம் ரூபாயை ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் வறட்சியான நிலப்பரப்பை கொண்ட தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவ முன்வந்திருக்கும் ஜப்பான் அரசாங்கம், ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக 46 இலட்சத்து 29 ஆயிரத்து 629 டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்ரெயருக்கு மேல் பயிரிடும் 2 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு ஜப்பான் அரசு 50 கிலோ யூரியா உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாடு...

நிலைமைகள் தொடர்பில் பேசினோம். எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் பேசினோம். அரசியல் தீர்வு குறித்தும் முக்கிய கவனம் செலுத்திப் பேசினோம்.

நாட்டில் சமாதானம், சமத்துவம் நிலவ வேண்டுமெனில் - பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். மிகவும் முக்கியமான சந்திப்பு இது.” - என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எம். பி. தெரிவிக்கையில்,

“நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தோம். நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள மரண அடி மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.” - என்றார். (ஐ)

## மாணவர்களை...

இதில், பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே, மாணவர்களை தாக்கினார் என்று கூறப்படும் ஆசிரியர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். (ஐ)

## தமிழரசு...

லாமல் தெரிவு செய்யப்பட்டால் அந்தக் கடமையைச் செய்யக்கூடிய ஆற்றல் - பொறுப்பு எனக்கு உள்ளது. அதற்காக நான் யாரையும் குறை சொல்லியோ - யாரையும் கழுத்தறுத்தோ பதவிக்கு வர விரும்பவில்லை. தலைமைக்குத் தகுதியுடையவர் என்று என்னை பலர் கேட்கின்றார்கள் - சொல்கின்றார்கள் என்பது உண்மையாக இருந்தாலும்கூட, எங்களுடைய கட்சி ஒற்றுமையாகப் போக வேண்டும் - ஒருமனதாகப் போக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உள்ளது. அவ்வாறு இணக்கப்பாடு வந்தால் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைப் பதவியை நான் ஏற்றுக்கொள்வேன்.” - என்றார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# தொடரும் மருந்துப் பற்றாக்குறையால் இலவச சுகாதாரத்துறை கடும் பாதிப்பு

## மருத்துவர் சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27

**நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு அபாய கட்டத்தை எட்டியுள்ளதாக எச்சரிக்கை மணி அடித்தாலும், அரசாங்கம் இவ்விடயத்தில் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதாக இலங்கையின் முன்னணி மருத்துவர் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.**

அரச மருத்துவமனைகளில் சில மருந்துகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு உள்ளதாக இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

"குறிப்பாக கிளினிக்குகளில், நோயாளிகள் வெளியில் இருந்து மருந்துகளை வாங்குவதற்கு வைத்தியர்கள் மருந்துச்சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். மேலும், தனியார் மருந்துக் கடைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் மருந்துகளால் சில நோயாளிகள் சரியான அளவை எடுத்துக் கொள்வதில்லை. இது ஒரு பாரிய பிரச்னை. இது விரைவில் தீர்க்கப்படவேண்டும்," என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

"கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பற்றாக்குறை நிலவுகிறது. எவ்வாறாயினும், அரசாங்கம் இந்த விடயத்தின் தீவிரத்தன்மையை சாதாரணமாக எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது,' எனவும் அவர் குறிப்பிட்டார்.

நன்கொடையாளர்கள் அரசாங்கத்துக்கு மருந்துகளை வழங்கும் செயல்முறையும் பல தடைகள் காரணமாக தடைப்பட்டுள்ளது.

இதேவேளை வலி நிவாரணிகள், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோயாளிகளுக்கான மருந்துகள் உட்பட 120 இற்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

தனியார் மருத்துவமனைகளிலும், அரச மருத்துவ மனைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. மேலும், அறுவைச் சிகிச்சை மற்றும் ஆய்வகப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

14 உயிர்காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை. எனினும் கூட, நிலவும் மருந்துப் பற்றாக்குறை சுகாதாரத்துறையில் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதால், அது நிவர்த்தி செய்யப்படவேண்டும் என அவர் கூறினார்.

மேலும், நிதிப்பற்றாக்குறை, கொள்முதல் முறையில் உள்ள சிக்கல், தெளிவின்மை, விநியோகஸ்த்தர்களின் ஏகபோகம் உள்ளிட்ட பல காரணங்களால் தற்போதைய மருந்துத் தட்டுப்பாடுக்கான காரணங்களாக அடையாளம் காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## சம்பந்தனை சந்தித்தார் சஜித்



கொழும்பு, மே 27

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இரா.சம்பந்தனின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக இதன்போது இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

நாட்டில் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமன்றி பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினர் என எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

## ஜனாதிபதியின் ஆலோசகராக ரோசி சேனாநாயக்க நியமனம்



கொழும்பு, மே 27

உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக கொழும்பின் முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்

ரோசி சேனாநாயக்க 2001 முதல் 2004 வரை மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக பதவி வகித்தார்.

2009-2010 இல் மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த அவர், 2015 ஆம் ஆண்டு குழந்தைகள் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

மேலும் , பிரதமரின் செய்தித் தொடர்பாளராகவும், பிரதமர் அலுவலகத்தின் துணைத் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில் அவர் உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்படும்!

கொழும்பு, மே 27

கியூ.ஆர் முறையின் கீழ் வழங்கப்பட்டு வரும் எரிபொருளின் அளவை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை திருத்தத்தின் பின்னரே, வழங்கப்படும் எரிபொருளின் அளவை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி, வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் திணைக்களங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வடக்கில் அதி உயர் வெப்பம்

கொழும்பு, மே 27

இலங்கையில் தற்போது கடுமையான வெப்பம் நிலவி வருவதால் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனடிப்படையில், 12 மாவட்டங்களுக்கு கடுமையான வெப்பம் நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

வடக்கு, வடமேல், கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்களிலும், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அளவு வெப்பம் நிலவும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதிக வெப்பமான நேரங்களில் மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளத் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

## பாடசாலைகளுக்கு இரு வார விடுமுறை!

கொழும்பு, மே 27

2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் நேற்று முதல் இரண்டு வாரங்களுக்கு மூடப்படும்.

அதன்படி நேற்று முதல் ஜூன் 11 ஆம் திகதி வரை பாடசாலைகள் மூடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஸ்ரீ2023 ஆம் ஆண்டுக்கான முதல் தவணைக்கான மூன்றாம் கட்டப் பள்ளிகள் ஜூன் 12 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

இதேவேளை, சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (அ)

## களுத்துறை மாணவி மர்ம மரணம் சந்தேகநபர்கள் தொடர்ந்து மறியலில்

கொழும்பு,மே 27

களுத்துறையில் ஐந்து மாடி விடுதி கட்டடத்தில் இருந்து விழுந்து 16 வயது பாடசாலை மாணவி உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 4 பேர் மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நேற்று களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பிரதான சந்தேக நபர், அவரின் சாரதியாகச் செயற்பட்டவர், சிறுமியின் நண்பி மற்றும் நண்பியின் காதலன் ஆகியோரே இவ்வாறு மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். முன்னதாக குறித்த சந்தேக நபர்களை கடந்த 15ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது, நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டி ருந்தது.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த விடுதி உரிமையாளரின் மனைவி கடந்த 15ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழில் வாள்வெட்டு இருவர் படுகாயம்!



யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் - யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழக்கடை நடத்துவோர் மீது நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத குழு ஒன்றினால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை நடத்திய வன்முறைக் கும்பல் தப்பிச் சென்ற நிலையில் தாக்குதலில் படுகாயமடைந்தோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(அ)

## அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீர்மானம்

கொழும்பு, மே 27

விமான நிலையம் ஊடாக தங்கம் கடத்திய பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பாராளுமன்ற அலுவல்கள் பற்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் நேற்று பாராளுமன்ற கட்டட வளாகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போதே அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கட்சித் தலைவர்கள் தீர்மானம் எடுத்துள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

இவர் வெளிநாட்டில் இருந்து கடந்த 23ஆம் திகதி இலங்கை திரும்பியபோது 3.5 கிலோ தங்கம் மற்றும் பெறுமதிமிக்க தொலைபேசிகள் போன்ற பொருட்களுடன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.